"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு ஆவணிமீ 25-ந் திகதி சனிக்கிழமை — பிரிதசதம் 10 | 34-ம் இலக்கம்

கைகொடுத்து உதவுங்கள்


பாதுகாவலனின்
ஒவ்வொரு வாசகரும்
ஒரு புதிய சந்தாநேயரைப்
பெற்றுத் தருவீர்களா?

காவலனின் வளர்ச்சிக்கு
உதவுவது
உத்தமமானதோர் தொண்டு.




# பாரதப் பிரதமரின் புகழ்மாலை

## கன்னியரின் சேவையைப் பாராட்டுகிறார்



இந்த வைபவத்துக்கு என்னை அழைத்தமைக்காகப் பெரிதும் நன்றியுடையவனுயிருக்கின்றேன். ஏனெனில், தன்னலமற்ற உங்கள்சேவையையும், இந்நாட்டின் மக்களிடையே, சிறப்பாக நோயாளரிடையே நீங்கள் செலுத்திவரும் உண்மையான அன்புப் பணியையும்பற்றி நான் நல்மதிப்புக் கொண்டுள்ளேன்.

......என அண்மையில் பாரதப் பிரதமர் ஜவகர்லால்நேரு அவர்கள் ஒருவைபவத்தில் தருமசபைக் கன்னியர்களைப் பாராட்டினுர்.

தருமசபைக் கன்னியர்களால் புதிதாக நிறுவப்பட்ட அனுதை விடுதியொன்றைப் பிரதமர் திறந்துவைத்தார். இவ்விடுதியில் அங்கவீனர்களும், கைவிடப்பட்டவர்களும், அகதிகளுமான குழந்தைகளை மேற்படி கன்னியர்கள் பராமரித்து வருவர். இது போன்ற பல விடுதிகளை இந்தியாவின் பலபாகங்களிலும் தருமசபைக் கன்னியர்கள் நிர்வகிக்கின்றனர்.

மேற்படி இல்லம் சுவிற்செலாந்துமக்கள் பலரின் உதவியுடன் நிறுவப்பட்டதாகும். இவ்வைபவத்தின்போது பாரதத்தின் பாதுகாப்பமைச்சர் கிருஷ்ணமேனன், திருமதி இந்திரா காந்தி ஆகியோருடன் பாரதத்தில் சுவிற்செலாந்திய தூதுவராலய உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

## பொதுச்சங்கம்

### இருபகுதிகளாக நடைபெறும்

வத்திக்கான் சங்கத்தை இரு தவணைகளாக நடாத்துவது எனவும், அவசியம்நேர்ந்தால் மற்ருெரு தவணையும் கூட்டப்படலாம் எனவும் கர்தினுல் பியா ஆண்டகை தெரிவித்துள்ளார். முதலாவது தவணை ஐப்பசி மாதத்தில் ஆரம்பமாகி மார்கழி மாச நடுப்பகுதிவரை நீடிக்கும். பின்னர் சங்கத்தில் பங்கு பற்றுபவர்கள் தங்கள் தங்கள் தேசங்கட்குச்சென்று மீண்டும் அடுத்ததவணையின் ஆரம்பத்தின்போது திரும்புவர். இரண்டாவது தவணை பாஸ்குத்திருநாளின்பின்னர் ஆரம்பமாகி ஆடி மாதம்வரை நீடிக்கும். சங்கத்தை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் முடிவுபெருவிடில் மேற்கொண்டும் ஒருதவணையை நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் எனவும் ஆண்டகை மேலும் தெரிவித்தார்.

## கென்னடி தம்பதிகளின் விஜயம்

### மெக்சிக்கோமக்கள் திருப்தியடைந்தனர்

அண்மையில் அமெரிக்க ஜனுதிபதி தம்பதிகள் மெக்சிக்கோ நகருக்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்தமை மெக்சிக்கோ மக்களிடையிலும், குறிப்பாகக் கத்தோலிக்கரிடையிலும் நல்ல திருப்தியை அளித்துள்ளது

ஆடிமாதம் முதலாந்தேதி கென்னடிதம்பதிகள் சரித்திரப் பிரசித்திவாய்ந்த குவாட்ட லூப்பே மாதா மகாலயத்துக்குத் திவ்விய பூசைகாணச் சென்றபோது 2லட்சத்துக்குமதிகமானமக்கள் அங்கு கூடிநின்று மகிழ்ச்சிகரமான வரவேற்பொன்றை அளித்தனர்.

ஆஸ்திகம் குறைந்து நாஸ்திகக் கொள்கைகள் மலிந்துவரும் மெக்சிக்கோ தேசத்திற்குக் கென்னடி தம்பதிகள் விஜயம்செய்ததும், அங்கு கத்தோலிக்க சடங்கானுசாரங்களில் கலந்துகொண்டதும் மெக்சிக்கோவின் கத்தோலிக்கத்துக்குப் புத்துயிரளித்துள்ளதென அவதானிகள் அபிப்பிராயப் படுகின்றனர்.

## ஜேர்மனியில்

அடுத்துவரும் ஐப்பசிமாதம் 26-ந் தேதி தொடக்கம் 28-ந் தேதிவரை புனித கபிரியேல் தபால்தலைகள் சேகரிப்போர் சங்கத்தினர் சர்வதேச தபால்தலைக் கண்காட்சியொன்றை ஏற்பாடுசெய்துள்ளனர்.

## தொழிலாளர்கட்கு நியாயமான வேதனம் வழங்கப்படல் வேண்டும்

### ஆயர்கள் வற்புறுத்துகின்றனர்

ஆர்ஜென்ரினுவின் மேற்றிராணிமார்கள் அண்மையில் அரசாங்கத்துக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அரசாங்க தொழிலாளர்கட்கும் நியாயமான வேதனம் அளிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர். வேலை நிறுத்தம் செய்யும் உரிமை தொழிலாளர்கட்கு உண்டு. ஆயின் வேலைநிறுத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

இச்சீர்கேட்டை நிவர்த்திக்க தொழிலாளருக்குவேண்டிய உதவியளிப்பதே சிறந்தமுறையாகும் அவர்கள் இளைப்பாறுங்காலத்தில் பென்சன் உதவிபெறும் வழிகளும் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்கள் திருப்திகரமாகத் தொழிற்படஇயலும்என மேற்றிராணிமார்களின் வேண்டுகோள் மேலும் குறிப்பிடுகிறது.

## 30மேற்றிராணிமார் சமுகமளித்தனர்

அண்மையில் காலஞ்சென்ற போலாந்துதேச கிருக்கோ அதிமேற்றிராணியாரான இயூஜினுஸ் பாஜிக் ஆண்டகையின் பிரேத அடக்கவைபவங்கட்கு 30 மேற்றிராணிமாரும், 1000 குருக்களுமுட்பட பெருந்திரளானமக்கள் சமுகமளித்திருந்தனர். அதிமேற்றிராணியார் இயூஜினுஸ் அவர்கள் 1890-ல் தார்னேபோல் என்னுமிடத்தில் பிறந்தார். 1944-ல் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசரால் துணைமேற்றிராணியாராக [illegible]. அதேவருட இறுதியில் அதிமேற்றிராணியாராகப் பதவியேற்றார்.



அனாதர் விடுதியில் கன்னியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆபிரிக்கயாத்திரை—10

# பல்வேறு கிறிஸ்தவ போதகர்கள்

— வண. பிரான்சிஸ் ரிப்ளேஅடிகளார்

என்னுடன் பிரயாணம் செய்பவர்களில் பலவேதபோதகர்களும் காணப்பட்டனர். அவர்களில் சிலர் பெண்கள். இருபது வயதுகூட நிரம்பாதவர்கள். இவர்களெல்லாம் ஆபிரிக்கமக்களிடையே கிறிஸ்துவைப்போதிக்கச் செல்லுகின்றனர். அந்தோ பரிதாபம்.

இவ்வேதபோதகர்களிடையே கவர்ச்சிகரமான பெண்ணொருத்தியைக்கண்டேன். தான் ஆறுமாதங்கட்கு முன்னர் தனது இரட்சகரைக் கண்டடைந்ததாகக் கூறினாள். இப்போது அஞ்ஞான இருளில் மூழ்கியுள்ள ஆபிரிக்க மக்களுக்கு இரட்சகரைப்பற்றி எடுத்துரைக்கச் செல்கின்றாளாம். இரட்சகரைக் கண்டடைந்ததாகக் குறிப்பிட்டீர்களே அதன் பொருள்என்னஎன்று வினவினேன்.

நான் காப்பாற்றப்பட்டேன் என்பதை அறிவேன் என்றாள்.

சரி, நீங்கள் இப்போது தனிமையாகச் செல்கின்றீர்கள். உங்கள் ஆன்மாவுக்குப் பலஅபாயங்கள் நேரிடலாம். அப்போதும் காப்பாற்றப்படுவீர்களா?

ஆம். யேசுக்கிறீஸ்துவில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். என்னை அவர் காப்பாற்றிவிட்டார். இனிமேல் எனக்கு அபாயமில்லை.

நீங்கள் தீயசெயல்களில் ஈடுபடுகிறீர்கள் எனவைத்துக்கொள்வோம். அப்போதும் கிறிஸ்துஉங்களைக் காப்பாற்றிவிட்டார் என்றநம்பிக்கையில் உங்கள் ஆன்மாபற்றிக் கவலையுறாதிருப்பீர்களா?

ஆம், தீயசெயல்களில் ஈடுபடுவது ஒரு பெலவீனம், தேவன் அதை மன்னிப்பார். ஒருமுறை ஒருவன் காப்பாற்றப்பட்டுவிட்டால் பின்னர் அவன் மோட்சஇராச்சியத்துக் குரியவனே என்றாள் அந்தப் போதகமாது.

உங்களதுவாதம் கிறிஸ்தவகொள்கைகளையே மாற்றியமைத்து விடுகிறது. கிறிஸ்துவில் குருட்டுநம்பிக்கையை வைத்துக்கொண்டு நாம்செய்யும் எவ்வித தீயசெயல்களும் பொறுக்கப்படுமென்று எண்ணிக்கொண்டு நமது கடத்தையைக் கவனியாதிருப்பது எவ்வளவு மதியீனம்என்பதை எடுத்துக் கூறினேன்.

அந்த இளம்போதகரின் கொள்கைகளைப்பற்றி அனுதாபம்கொண்டேன். இப்பெண்ணிடமிருந்து இக்கொள்கைகளைக் கற்றுக்கொள்ளப்போகும் அந்த ஆபிரிக்க மக்களுக்காக அதிகமதிகமாக அனுதாபப்பட்டேன்.

யான் முன்னர்கூறியதுபோன்று இவ்விதமே கிறிஸ்துபற்றி வெவ்வேறு கொள்கைகளையுடைய பலபோதகர்கள் அந்தக்கப்பலில் சென்றுகொண்டிருக்கிறார்கள். கர்த்தரின் சுவிசேஷத்தை மட்டும் அரைகுறையாகப்படித்துவிட்டு அதைத் தம்மனம்போனபடி அர்த்தம் செய்துகொண்டு கிறிஸ்துவின்மேல் அளவற்ற நம்பிக்கையையே போதனை செய்யும் இந்தப் போதகர்களால் ஆபிரிக்க மக்களிடையே கிறிஸ்துபெருமானையும், அவரது இரட்சணிய அலுவல்களையும்பற்றிய தவறான விளக்கங்கள் ஏற்படப்போகின்றன என எண்ணிவருந்தினேன்.

இன்று கப்பலில் சம்பாஷணையின் போது ஆபிரிக்காவில் கருப்பர்களின் அவலநிலையைப்பற்றிய விவாதமே முக்கிய இடம்பெற்றது. பிரயாணிகளில் பலரும் ஆபிரிக்க அரசாங்கத்தின்செயலை வன்மையாகக் கண்டித்தனர். வெள்ளையர்கட்கு உரிமையும், கருப்பர்கட்கு அடிமைபோன்றநிலையும் அளித்திருப்பது அக்கிரமமான செயல்எனப் பல பேச்சாளர்கள் அடித்துப்பேசினர்.

மாலை 4மணியளவில் விதமான பட்சிசாலங்கள்பல எங்கள் நாவாயை நோக்கிப் பறந்துவந்தன. கப்பலின் மேற்றளத்தில் அவை தங்குவதும் பிரயாணிகள் ஓடிப்பிடிப்பதும் அவை பறந்து செல்வதும் சிறந்தகண்காட்சியாகவிருந்தது. இராவுணவுக்கென நாம்சென்றபோது எங்கள்உணவுமேசையில் மொம்பாசாவுக்கு எங்கள்கப்பல் செல்லும் வரையிலான நிகழ்ச்சிநிரல்ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அச்சடிக்கப்பட்ட பொதறிவு விளையாட்டுத்தாள் ஒன்றும்காணப்பட்டது. இந்தத்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளின்பிரகாரம் இடைவெளிகளை நிரப்புதல் வேண்டும். 9½மணியளவில் சரியான விடைகட்குப் பரிசுவழங்கப்படும்.

இப்பொதறிவுத்தாளை நிரப்புதல் மிக வேடிக்கையாகவிருந்தது. பின்னர் உங்களுக்குத் தெரியுமா என்றபோட்டி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து சில கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்த நிகழ்ச்சிகள் பலவற்றில் யான் பங்குகொள்வதற்கு எனதுஉடல்நிலை இடங்கொடுக்கவில்லை. எனவே நோத்துடன் படுக்கைக்குச் செல்லவேண்டியதாயிற்று.

### 2 வைகாசி, 1960.

அதிகாலை 5½மணிக்கே துயிலெழுந்துவிட்டேன். எனதறையின் சிறு சாளரத்தினூடாக நோக்கினேன். மேற்கு ஸ்ராம்போலியின் பக்கத்தில் சிலதீவுகள் காணப்பட்டன. விரைவாக உடையணிந்துகொண்டு கப்பலின் மேற்றளத்துக்குச் சென்றேன். அத்தருணம் கப்பல் 2,500 மக்கள்வசிக்கும் ஒருதீவைத் தாண்டிச் சென்றது. இத்தீவில் பலஎரிமலைகள் உண்டு. எரிமலையிலிருந்து எழும் புகைப்படலங்களைத் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்தது.

## நீண்ட காலம் வாழ்ந்தது எப்படி ?

100 வயதை அடைந்த பெரியவர் ஒருவர் தனது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார். விழாவுக்கு வந்திருந்தவர்களில் ஒருவர் அவரைப் பார்த்து: "நீங்கள் இவ்வளவு காலம் நல்ல சுகமுடன் வாழ முடிந்தது எப்படி?" என்றார்.

முதியவர்: 80 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்துகொண்டபோது, நானும் எனது மனைவியும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டோம். எங்களுக்குள் மனத்தாங்கல் ஏற்படும்போதெல்லாம், அவள் கோபம் அடைந்து சீறும்பொழுது நான் வெளியே நழுவி, உலாவச் சென்றுவிட்டு, அவள் அமைதியை அடைந்தபின் வரவேண்டும்.

விருந்தினர்: அதற்கும் உங்களது நீண்டகால வாழ்விற்கும் என்ன சம்பந்தம்?

முதியவர்: என் வாழ்வின் பெரும் பகுதியை வெளியே சுத்தமான காற்றில் செலவழிக்க நேர்ந்ததால்தான்.

## கிழக்கிலங்கையில் சின்னமடு

### சதாசகாய மாதா ஆலயம் ஆயித்தியமலை

**திருநாள்: 2, புரட்டாசி 1962.**

கிழக்கிலங்கையில் ஒரு யாத்திரை ஸ்தலம்.

அனைவோருக்கும் நல்வரவாகுக!
அன்னையின் ஆசீர் நிறைவாகுக!!
"தாயே உன் பாதம்
தஞ்சமென் றோடிவந்தோம்."

வண. சுவாமி G. E. L. வம்பேக்
பரிபாலகர்.

தாண்டவன்வெளி மீசாம்,
மட்டக்களப்பு.

### திரிகோணமலை
### தூயமரியன்னை மேற்றிராசனக் கோவில் வருடாந்த
## மகோற்சவத் திருநாள்

திருமலை பெரியகடையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் பரலோக ஆரோபணத் தாயாரின்திருநாள் இவ்வருடம் 15-8-62 புதன் வாரம் கொண்டாடப்பட்டது. மேற்படி ஆலயத்திருநாளுக்கு ஆயத்தமாக நவநாள் ஆராதனைகள் 29-7-62-ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று.

தினமும் மாலையில் செபமாலை, பிரார்த்தனை சொல்லி நற்கருணை ஆசீர் அருளப்பட்டது. 12-8-62 தொடங்கி 15-8-62 வரையும் தினமும் காலையும் மாலையும் வண. பிதா றோபட் A. ஒக்கஸ் சுவாமிகள் உருக்கமான பிரசங்கங்கள் நிகழ்த்தினார்.

14-8-62 நண்பகல் திரளான பக்தர்கள் குழுமியிருக்கத் தேவதாயாரின் திருச்சுரூபம் பீடத்திலிருந்து எடுத்துவரப்பெற்று இதற்கென விசேஷவிதமாய் ஆயத்தஞ் செய்யப்பெற்ற கூட்டில் எழுந்தருளச் செய்யப்பட்டது. பிற்பகல் 3 மணியிலிருந்தே பக்தர்கள் ஆலயத்திற்கு ஏராளமாய்ச் சேர ஆரம்பித்தனர். அன்று மாலை செபமாலையின்பின் பிரசங்கமும், மாலையாராதனை ஆசீர்வாதமும் தேவதாயாரின் திருச்சுரூபபவனியும் ஆலயவளவினுள் நடைபெற்றது.

மறுநாள்காலை 1-ம்பூசை 4-30க்கும், 2-ம்பூசை 5-30க்கும் நடைபெற்றது. 7-30க்கு வண. வெலிசியன் பெர்னாண்டோசுவாமியும் J. டிக்கோனிங்சுவாமியும் துணைபுரிய, வண. ஆரன்ஸ்சுவாமியால் பெரியபாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. மாலை 5மணிக்குச் சகாயமாதாவின் நவதினவேண்டுதலும் ஆசீர்வாதமும், பின் திருச்சுரூப, சுற்றுப்பிரகாரமும் நடந்தேறியது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கூட்டம் அணியணியாய் முன்செல்ல மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட வீதி வழியே பரிசாரகர் குருமார் புடைசூழத் தேவதாயாரின் திருச்சுரூபம் அமைதியாகப் பவனிவந்தது. அவ்வமையம் பாடகர்களும், பக்தர்களும் குருமாரின் வழிநடத்தலின்கீழ் செபங்களையும், பாக்களையும்பாடி மனமொருமித்துச் செபித்துச்சென்றமை எவர்க்கும் மனஅருட்சியைக் கொடுத்தது.

திருச்சுரூபம் கோவிலை மீண்டதும் உபதேசியார் எல். எஸ். அன்ரனி அவர்கள்முன் செபிக்க, அவரைத் தொடர்ந்து பக்தர்கள் உரத்தசப்த்தமாய் தேவதாயாருக்கு தம்மை ஒப்புக்கொடுத்தனர். பின் கொடி இறக்கியதும் வண. கட்டனைக்குரவால் தேவ அன்னையின் திருச்சுரூப ஆசீர் அளிக்கப் [illegible] இனிதே நிறைவெய்தியது.

—நிருபர்.

### கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3655**

சிறுப்பிட்டி, கூட்டுறவு கமத்தொழில் உற்பத்தி விற்பனவுச்சங்கம் (பதிவு இல. J. 1234) சங்கத்துக்காக ஏற்படுபவர்கள் தலைவரும், காரியதரிசியும்
1. வல்லிபுரம் மாணிக்கமும்
2. ஆறுமுகம் பொன்னையாவும்
—வழக்காளிகள்.

எதிராக, சிறுப்பிட்டி
1. சனகசபை பொன்னையாவும்
2. பெண் இராசமணியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 3655-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஐப்பசிமீ 6-ந்உ சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,942-ம், 27-9-60 தொடக்கம், 1-9-61 வரைக்கும் ரூபா 1,650-க்கு 4வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 197ரூபா 70சதமும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வலிகாமம்கிழக்குப்பகுதி, புத்தூர்கோயிற்பற்று சிறுப்பிட்டிஇறை, "கோளியன்-தம்பன்" பர. நில. இலா. 33. எல்லை: கிழக்கு— நன்னித்தம்பி விசுவலிங்கத்துக்கும், செல்லப்பா கைம்பெண் பசுபதிக்கும் உரியஆதனம். வடக்கு — எதிர்மனசிங்கத்தின் உரிமையாளருக்குரிய ஆதனம். மேற்கு — கனகர் சின்னத்தம்பிக்குரிய ஆதனம். தெற்கு — சுப்பிரமணியம் கனகசபைக்கும், நன்னித்தம்பி விசுவலிங்கத்துக்கும் உரியஆதனம். இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவுகந்தோரில் K $\frac{199}{251}$-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
16A, அம்மன்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 142/62

### கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3722**

பிலப்வீடு யாழ்ப்பாணம்
வண. பிதா நீக்கிலாப்பிள்ளை ஆசீர்வாதம் பெனடிக்ற் — வழக்காளி.

எதிராக, நாவாந்துறை
காலஞ்சென்ற
1. கிறிஸ்ரி பஸ்தியாம்பிள்ளை அல்லது செல்லத்துரை
நாவாந்துறை
2. செபஸ்தி அல்பிறெற்றும்
3. பெண் அக்கினேசம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 3722-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஐப்பசிமீ 6-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,515-50சதம். 28-10-60 தொடக்கம் 30-8-61 வரைக்கும் ரூபா 1,000-க்குப் 12வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 227ரூபா 50சதமும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணைமேற்கு இறை "பசையடி" பர. நில. இலா. $\frac{3}{4}$-ம், வீடும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— றோட்டு. வடக்கு— ஒழுங்கை. மேற்கு— கல்பாறு பெருயாச்சிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு— மரியான் பாவிலுவுக்கும், சகோதரனுக்கும் உரியஆதனம். இதடங்கலும், இதைச்சேர்ந்தவைகளும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 141/62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## மருதமடு ஆவணித்திருநாள்

பரிசுத்த தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாள் மருதமடுத்திருப்பதியிலே சென்ற 15-ம்தேதி புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. இலங்கையின் நாலுபகுதிகளிலுமிருந்து ஏராளமான யாத்திரிகர்கள் இத்திருநாளிலே வழமைபோலப் பக்திப்பரவசத்துடன் கலந்துகொண்டார்கள். யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகா வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரும், அநேக குருப்பிரசாதிகளும் திருப்பதியில் சமுகமாயிருந்து யாத்திரிகர்களின் ஆன்மசரீர தேவைகளைக் கவனித்தார்கள். திருநாளன்றுகாலை மேற்றிராணியார் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். பின்னர், மருதமடுச் செபமாலைமாதாவின் அற்புத திருச்சுரூபம் செபங்கள், தோத்திரகீதங்களுடன் ஆலயமுன்றிலின் வீதிவழியே சுற்றப்படலாயிற்று. சுற்றுப்பிரகாரம் மீளவும் ஆலயத்தை அடைந்ததும், திருச்சுரூபம்கொண்டு யாத்திரிகர்கள் ஆசீர்வதிக்கப்பெற்றுத் திருநாள் முடிவாயிற்று.

## புதிய பஸ்பிரயாண சேவை

இரத்மலானையிலிருந்து தெஹிவலைவரையிலே 129பிரயாணிகள் நின்றுகொண்டு பிரயாணஞ்செய்யக்கூடிய புதியஒருபஸ்சேவை சென்ற 14-ந்திகதியன்று ஆரம்பமாயிற்று. இதனை ஆரம்பித்துவைத்த தொழில்-தேசியசேவைகளின்மந்திரி அவ்வேளை பேசியபோது: இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியநிலைமை ஏற்படுகிறவரை பஸ்கட்டணம் உயர்த்தப்பட மாட்டாதெனத் தெரிவிக்கலாயினர்.

## புதிய உணவு உற்பத்தித் திட்டம்

தனக்குக்கீழுள்ள சகலசக்திகளையும் தீவிர உணவுஉற்பத்தியில் ஈடுபடச்செய்வதெனக் காணி-விவசாயமந்திரி முடிவுசெய்திருக்கிறார். இப்புதிய உணவுஉற்பத்தித்திட்டத்தின்விளைவாக இவ்வருடத்தில் மேலதிகமாக மூன்று இலட்சம் ஏக்கர்காணி நெற்செய்கைக்குக் கொண்டுவரப்படும். அதனால் மேலதிகமாக ஒருகோடிபுசல்நெல் உற்பத்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிறநாடுகளில் அரிசிஉற்பத்திகுறைந்தமையால் ஏற்படப்போகும் அரிசித்தட்டுப்பாட்டைப் போக்குமுகமாக அடுத்த பெரும்போககாலத்தில் நாட்டிலே நெல்செய்கைபண்ணக்கூடிய ஒவ்வொரு ஏக்கர்காணியையும் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராமக்குளங்களைச் சேர்ந்த காணிகளிலும் நெற்பயிர்செய்ய அனுமதிக்குமாறு அரசாங்கஅதிபர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## தேர்தல் ஆட்சேப புதியமனுக்கள்

சமீபத்தில் நடந்தேறிய உபதேர்தல்களிலே அநுராதபுரத் தொகுதிக்குத் திரு. கே. பி. இரத்நாயக்கா தெரியப்பட்டதை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்டமனுவை விசாரணைசெய்ய நீதியரசர் எம். சி. சன்சோனி அவர்களையும், வெலிமடைத் தொகுதிக்குத் திரு. கே. எம். பி. இராசரத்தின தெரியப்பட்டதை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரணைசெய்ய நீதியரசர் ஏ. டபிள்யு. எச். அபெயசுந்தரா அவர்களையும் பிரதமநீதியரசர் நியமனஞ்செய்திருக்கின்றார்.

## சர்பத்துவிற்ற எம். பி.

பல்தெனியாவில்நடைபெற்ற கூட்டம் ஒன்றிலே போக்குவரத்து உதவிமந்திரி திரு. ரி. பி. தென்னக்கூன் பேசுகையில்: "அநுராதபுரத்தில் ஒருபாட்டுப் புத்தகத்திலிருந்து கூத்துப்பாடல்களை நான் எனது இனிமையான குரலில் பாடிப் பெருஞ்சனத்திரளை ஈர்த்துக் கொண்டிருந்தபோது அக்குறணைமுதல் எம். பி. திரு. ஹேமச் சந்திர சிறிசேன அங்கே சர்பத்தும், பீடாவும் விற்றுக் கொண்டிருந்தார்; இன்று வேலையில்லாது இருப்பவர்கள் எம்மிடமிருந்து ஒருபாடம் கற்றுக்கொண்டு வீண்பொழுது போக்குவதைவிட்டு நெல்வயல்களில் வேலைசெய்யப் போகவேண்டும்" எனக்கூறலாயினர்.

## காணிமந்திரியின் மறுதிட்டம்

உணவுஉற்பத்தியைப் பெருக்குவதற்குக் காணி- விவசாயமந்திரி மற்றொருதிட்டத்தையும் தயாரித்துவருகிறார். தரிசாகக்கிடக்கும் பலஏக்கர் முடிக்குரிய காணிகளிலே காணியில்லாதவர்களைக் குடியேற்றிச் சகலவசதிகளையும் செய்துகொடுப்பதே அவர்தயாரித்துவரும் திட்டமாகும். சிலகுறிப்பிட்ட பகுதிகளிலேயே குடியேற்றதிட்டங்களின்கீழ் காணிவழங்குவதுடன் நின்றுவிடாது நாட்டின் சகலபகுதிகளிலுமே குடியேற்ற திட்டங்களின்கீழ் காணிவழங்கப்படும். போதியநீர்ப்பாசன வசதிகள்இல்லாத இடங்களிலே கிணறுகள் வெட்டிக்கொள்வதற்குக் கடனுகப் பணம்வழங்கிப் பின்னர் தவணைகளில் வாங்கிக்கொள்ளப்படும்.

## கட்சியிலிருந்து விலகினர்

அரசாங்கம் பங்கீட்டரிசியை வெட்டிக் குறைத்திருப்பதை ஆட்சேபித்து, இதுவரை அரசாங்ககட்சியுடன் சேர்ந்திருந்த தெனியாய எம். பி. திரு. சுமனபால தஹநாயக்கா சென்றவியாழக்கிழமை அக்கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியுடன் சேர்ந்துள்ளார். தற்போதுஇவர் எதிர்க்கட்சியில் ஒருசுயேச்சைவாதியாக இருந்து வருகிறார். தனது தொகுதியைச்சேர்ந்த மக்களுடன் கலந்தாலோசித்தபின்னரே எந்த அரசியற்கட்சியுடன் சேர்வதென்று இவர் முடிவுசெய்வார்.

## குருப்பட்டாபிஷேகம்

மெசேர்ஸ் சாமுவேல் அன்சன்ஸ் கம்பெனி எஞ்ஜினியர் திரு. வி. எக்ஸ். பி. பர்னண்டோ அவர்களின் புதல்வரான வண. பிறதர் யோசெவ் அவர்கள் அடுத்துநிகழும் புரட்டாசிமாதம் 1-ந்திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு யாழ்ப்பாணம், அர்ச். மரியநாயகியின் ஆசனக்கோவிலிலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெறவிருக்கின்றார். பின்தக் கொழும்பிலே கொட்டாஞ்சேனை சந்தலூசியாவின் ஆசனக்கோவிலிலே அடுத்த புரட்டாசிமாதம் 8-ந்திகதி சனிக்கிழமை காலை 7மணிக்குத் தமது முதற்பாடற்பூசையை நிறைவேற்றுவார். இரு திருவைபவங்களின்போதும் சமுகமளித்துத் தங்கள் புதல்வருக்காக மன்றாடிக்கொள்ளுமாறு சுற்றத்தவர்களையும், நண்பர்களையும் வி. எக்ஸ். பி. பர்னண்டோதம்பதிகள் பரிவாகக்கேட்டுக்கொள்ளுகின்றார்கள்.

## இளைஞர்களுக்குக் காணிகள்

கிளிநொச்சிப் பகுதியைச்சேர்ந்த உடையாகட்டுக்குளத் திட்டத்திலகாடுவெட்டிக் குடியேறுமாறு நூறு இளைஞர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கிளிநொச்சி எம்.பி. திரு. சிவசு[illegible] குடியேற்ற[illegible]தார்.

## நல்ல முடிவு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

"நீ வந்து சொல்லிவிடு பாட்டி; அவங்க நல்லவங்க; வாபாட்டி" என்று அற்புதம் பாட்டியின் கையைப் பிடித்திழுத்தாள்.

பேரப்பிள்ளையின் ஆசையை நிறைவேற்றத் துடித்த சூசன் பாட்டி, சிறுமிக்காகப் பரிந்துபேசி உத்தரவும் பெற்றுவிட்டாள். அற்புதத்தின் மகிழ்ச்சிக்கு அளவேது!

மனோகரமான காட்சியளித்தது மருதமடுத்திருப்பதி. அங்கு விளங்கிய மனமகிழ்வு—சாந்தி எங்கும் கிடைக்காது. சாந்திபுரமாகத் திகழ்ந்தது மருதமடு. தஞ்சம்என்று வந்தவர்களை அபயம்அளித்து அரவணைக்கும் அமல உற்பவியான மரியாயின் பாதநிழலில் இளைப்பாறவரும் அன்பர்களைக்காணும்போது குழந்தை உள்ளத்திலேயே உவகையளித்தது.

ஆவணித்திங்கள் 14-ம் நாள் திருப்பதி உற்சவம் முடிசூடும் கட்டத்தையடைந்திருந்தது. மறுநாள் விடிந்தால் யாத்திரிகர்கள் தம் வீடுகளைநோக்கிப் புறப்படத் தொடங்கிவிடுவர். சனசஞ்சாரம்அற்றுத் தனிமை அடைந்துவிடும்.

திருநாட்பூசை முடிவடைந்தது. மக்கள் தத்தம் விடுதிகளில்இருந்து எடுக்கவேண்டியவற்றை எல்லாம் எடுத்துக் கட்டிக்கொண்டு, கடைசிமுறையாகத் தேவதாயின் தரிசனைபெற்று, திருப்பதியைவிட்டுவிலக மனமில்லாமல் தேவதாயாரின் பீடத்தண்டையில் வந்து கூடியவண்ணமும், அரைமனதுடன் வெளியேறிக்கொண்டும் இருந்தனர். மூட்டை முடிச்சுகளுடன் மோட்டார்வண்டிகள் ஆலயமுன்றிலில் வந்துவந்துநிரைகட்டிநின்றன. சிறுமி அற்புதத்தை அழைத்துவந்தவர்களும் தேவதாயாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தத் தங்கள் மோட்டார்வண்டியில் வந்து ஆலயமுகப்பில் நின்றனர்.

கூட்டத்தில் கூட்டமாய் அற்புதம் தான்வந்த நோக்கத்தை நினைவிற்கொண்டு கூட்டத்திலே தனது தந்தையைத்தேடலானாள். இந்தப்பராக்கிலே தான் கூடிக்கொண்டுவந்தவர்களைத் தவறவிட்டுவிட்டாள். அவர்களைக்காணுது பாதவித்து அங்கலாய்த்து நின்றாள். தான்வந்தமோட்டார் எங்கு நிற்கிறதுஎன்று தேடிக்கொண்டு தயங்கிக்கொண்டுநின்றாள். அச்சமயம் ஒரு மோட்டார்வண்டியில்நின்று இறங்கிய சிறுவன் ஒருவன் குறுக்கும் மறுக்குமாக ஓடிக்கொண்டிருந்தான். மின்னலைப்போல் ஒருவண்டி விரைந்துவந்தது. சிறுவனை முட்டிவிடும்போல் நெருங்கவே, அதைக்கண்ட அற்புதம் ஓடிப்பாய்ந்து அவனைக்காப்பாற்றப் பறந்தாள். சிறுவனைக் கையில்பிடித்து இழுத்த மறுகணம் அற்புதம் முட்டி விழுத்தப்பட்டாள்.

எங்கும் பரபரப்பு. ஒருகூட்டமே அங்கு கூடிவிட்டது. எல்லோரும் என்ன செய்வதென்று தெரியாதநிலையில் கலங்குகையில், இனந்தெரியாத ஒருமனிதன் முன்சென்று சிறுமியைத் தூக்கி மடியில் இருத்தி முதல்சிகிச்சைஅளிக்க சட்டையைக்கழற்றினன். என்ன ஆச்சரியம்! 'என் மகளே!' என்று கதறிவிட்டான் அவன். சிறுமியின் இடதுதோளில் இருந்த மச்சம்தான் தந்தையையும் மகளையும் இணைத்தது. டாக்டரும் வந்தார். சிகிச்சைபெற்றதும் அற்புதம் தெளிவடைந்தாள். அவளை அழைத்துவந்தவர்களும் வந்து சேர்ந்தனர். அற்புதத்தின் தந்தையை அடையாளம் கண்டுகொண்டனர். சிறுமியின் ஆசையும் நிறைவேறியது. தந்தையை அடைந்ததில் அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவும் உண்டா? தேவஅன்னையின் கடாட்சம் தான் இதுஎன்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.

— எஸ். எம். ஜே.

## மரண ஞாபகம்



பிறப்பு: 15-10-1893
இறப்பு: 25-8-1960

என்றும் எம்மால் மறக்கக்கூடாத விதமாய் நேசிக்கப்பட்ட நேசபத்தாவும், அரியமகளும் பரமபதம்அடைந்தது இம்மாதமாகும். யேசுபிரானின் அரியபாடுகளை என்றும் தியானித்து அர்ச். பிரான்சீஸ்குவின் 3-ம் சபைக் கிளை உபதலைவரும், உபகிளைத் தலைவருமான எஸ். என். சாமுவேல் 25-8-62. நேசபுத்திரி மேரி பிலோமினு இராசாத்தி 29-8-62 மரண நிறைவு தினங்களாகும். "ஆண்டவரே இவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை அருளும். முடிவில்லாத பேரொளி இவர்கள்மேல் ஒளிர்வதாக."



பிறப்பு: 22-6-1927
இறப்பு: 29-8-1940

சாமுவேல் எமிலியா அன்னம்மா.

பிலோமினுவாசம், மிருசுவில்

134/62

## முட்டாள் சுப்பன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்டியில் சென்ற ஒருவன் வீசிய கொட்டைச்சுருட்டு ஒன்று சூட்டுக்கும்பத்துள் விழுந்து தீப்பற்றியது. கடுமையான சோழகக்காற்று வீசிக்கொண்டிருந்ததின் காரணத்தால் சொற்ப நேரத்தில் அக்கும்பம் முழுவதும் தீக்கிரையாயிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். சுப்பன் என்னசெய்தான் தெரியுமா? பாவம்! அவனுடையஎசமான்கூறியபடி, பிரமாதமான சம்பவங்கள்நடந்தால் ஓடோடிவந்து எனக்கு நேரே சொல்லவேண்[illegible] தாமதமும் ஏற்படக்[illegible] விளங்கினதா? என்ற வார்த்தைகள் அவன் மனதுக்கு வந்தன. தீப்பற்றியதைக் கண்டதும் அவன் குடலோட்டத்தில் ஓடித் தன்எசமானிடம் நடந்தவிஷயத்தைக் கூறினான். எசமானே கோபாவேசத்துடன் அவனுக்கு ஒரு நீண்ட தடியால் தலையில் அடித்தான்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பொறனை, சதாசகாயமாதாவிடம் நேர்ந்து வேண்டிக்கொண்டதினால், எனது வயிற்றில் வந்த கடுமையான வருத்தம் குணமாகியது. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்க மூன்று வருடம் தாமதித்ததற்காக, சகாயமாதாவிடம் மன்னிப்புக்கோரி, பூரண சுகம் அருளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

147/62. எம். எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணிமாதம்

| | | | |
|---|---|---|---|
| 26 | ஞா. | இஸ்பிரீத்துசாந்து ஆக. பின் 11-ம் ஞாயிறு | ப |
| 27 | தி. | அர்ச். கலசாஞ்சியு சூசையப்பர் | வெ |
| 28 | செ. | அர்ச். அகுஸ்தீனூர் | வெ |
| 29 | பு. | அர்ச். ஸ்நாபக அருளப்பரின் சிரச்சேதம் (அர்ச். சபீனம்மாள்) | சி |
| 30 | வி. | அர்ச். லீமா ரோசம்மாள் | வெ |
| 31 | வெ. | அர்ச். பிறவா இரேமுந்தப்பர் | வெ |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆவணிமாதம் 25-ந் தேதி


## அருளப்ப தந்தையின் வேண்டுகோள்

அடுத்த ஐப்பசித்திங்கள் பதினொராம்நாள். பரிசுத்ததந்தை அருளப்பர் திருச்சபையின் பொதுச்சங்கத்தைக் கூட்டுகிறார். சத்திய திருச்சபையின் வரலாற்றில் கடந்தகால அனுபவங்களை அலசுவது, எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஆராய்வது என்பவை பொதுச்சங்கத்தின் முக்கிய அலுவல்கள்.

வத்திக்கான் சங்கம்பற்றிய செய்திகள் அகில உலகத்தினதும் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. முன்னர் இல்லாதவிதமாகச் சங்க நடவடிக்கைகளைக் கத்தோலிக்கரல்லாதாரும் அவதானிக்கத் தொடங்கியுள்ளனர்.

அதிக விளம்பரத்துக்கு உள்ளாகிய சங்கம் திருப்திகரமாக இயங்குதல் வேண்டும். சாத்தானின் முயற்சிகள் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் குறுக்கிடுதல் கூடாது எனக் கத்தோலிக்க பிரமுகர்கள்—திருச்சபையின் உயர் அதிகாரிகள் விரும்புகின்றனர்.

எனவே, சங்கத்தின் சித்திக்காக கத்தோலிக்கரனைவரும் உதவ வேண்டியநிலை உருவாகியுள்ளது. வேதபோதகங்களில், கத்தோலிக்க கொள்கைகளில் பேரறிஞர்களாக விளங்கும் இல்லறத்தோர் சங்கத்தில் கலந்துகொண்டு தங்கள் பொன்னுன அபிப்பிராயங்களை உதவுவர். சாதாரண கத்தோலிக்கர்கள் எவ்விதம் உதவலாம்?

திருச்சபையின் தலைவர், அருளப்ப பாப்பரசர் அதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு கத்தோலிக்கனும் தனது செபதப முயற்சிகளினுல் பொதுச்சங்கத்துக்கு உதவவேண்டுமெனக் கிறிஸ்துவின் பிரதிநிதி கேட்டுக்கொள்கின்றுர்.

தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது சுவிசேஷ வார்த்தைகள். எங்கள் சொந்த நன்மைகட்காக ஒருநாளில் பலதடவை செபிக்கின்ருேம். எமக்கு மிகவும் பிரியமானவர்கட்காகவும் இறைவனை நோக்கிப் பிரார்த்திக்கின்ருேம்.

நாம் கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் சரீரத்தைப் புசிப்பதால் சகோதரத்துவ ஐக்கியங் கொண்டவர்கள். அத்துடன் கிறிஸ்துவிலும் ஒன்றித்தவர்கள். எமது ஒன்றிப்பினுல் உருவாகியதே திருச்சபை. எனவே திருச்சபைக்காக, அதுமேற்கொள்ளும் உன்னத பணிகட்காகச் செபிக்கக் கடமைகொண்டவர்கள் கிறிஸ்தவர்கள். நாம் இணைந்துள்ள, எம்மை வழிநடாத்துகின்ற, பரிசுத்த மந்தையின் நலனுக்காகவாவது செபிக்க வேண்டாமா?

சாதாரணமாக துன்பியல் நிகழ்ச்சிகளை எவரும் விரும்புவதில்லை. ஆயின் நல்ல கருத்துகட்காகத் துன்பங்களைச் சகித்துக்கொள்ள எவரும் பின்வாங்குவதில்லை.

அலைகடலில் அலைந்துதிரியும் மீனவன் அதிக மச்சங்களைச் சம்பாதிக்கலாம் என்ற கருத்துக்காகத் தனது இன்னல்களைச் சகித்துக்கொள்கின்றுன். பின்னர்வரும் பெரும் பயன்கருதி உழவன் கடும் வெயிலிலும், கொடும்பனியிலும் பாடுபட்டுழைக்கின்றுன். தம் வாழ்வில் உற்ற நண்பர்கட்காக, உறவினர்க்காக, தாய்நாட்டுக்காக நல்ல கொள்கைகட்காகத் துன்பங்களைச் சகித்துக்கொள்பவர்களை, தியாகங்களை மேற்கொள்பவர்களை நாம் தினசரி காணக்கூடியதாயுள்ளது.

எங்கள் திருச்சபையின் நலன்கருதி, வரப்போகும் பொதுச்சங்க சித்திக்காக கத்தோலிக்கராகிய நாம் ஏன் சிறுபரித்தியாகங்களைச் செய்யக்கூடாது. பெரிய தபமுயற்சிகளைச் செய்யுங்கள் என யாருமே கூறவில்லை. ஒருநாளில் எம்மை எதிர்நோக்கும் இன்னல்கள், வருத்தங்கள், கவலைகள் பல உண்டு. இவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளுதல், அவற்றைப் பொதுச்சங்கத்துக்காகச் சகித்துக்கொள்ளல். இவற்றையே எங்கள் அன்புத்தந்தை அருளப்ப பாப்பரசர் கேட்கின்றுர்.

ஒரு கத்தோலிக்கனின் வாழ்வில் செபமும் தபமும் கூடப்பிறந்தவை. இவையிரண்டும் இல்லையேல் அருள்நிறைந்த வாழ்க்கை இல்லை. எனவே, சாதாரணமாக நாம் செய்யும் செபதப முயற்சிகளுடன் பொதுச்சங்க சித்திக்காகத் திருச்சபை எம்மிடம் எதிர்பார்க்கும் சிறப்பான செபதபமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது கத்தோலிக்கர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 11-ம் ஞாயிறு

தேவஇரக்கம் நான் ஞானஸ்நானம் பெற்றவுடனே எனக்குஅருளப்பட்டது என்பதே இன்றைய ஞாயிற்றுக்கிழமைச்சாரம. சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் மகிமைக்கு வழியைக் காட்டுகின்றது. ஏனெனில், வரப்பிரசாதத்துக்கும், மகிமைக்கும் கர்த்தாவாக இருப்பவர் சதாகாலமும் ஜீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமான சர்வேசுரன்.

[சாந்தி தனது பூசைப் புத்தகத்துடன் ஞானஸ்நானம் படிப்பிக்கும சிஸ்ரர் செலினிடம்வந்து தனக்கு ஞாயிற்றுக்கிழமைப் பூசையைப்பற்றி விளங்கப்படுத்தும்படி கேட்கிறுள்.]

**சாந்தி:** சிஸ்ரர், எனக்காகக்கொஞ்ச நேரம செலவழிப்பீர்களா?

**சிஸ்ரர் செலின்:** ஆம், உனக்கு என்னவேணடும்?

**சாந்தி:** என்னுடைய பிறந்ததிருநாளுக்கு எனது அம்மா ஒருபூசைப்புத்தகம் வேண்டிக்கொடுத்தாள். ஆகவே, போனகிழமை எங்களுக்கு ஞானஒடுக்கம்போதித்த வண சூசைசுவாமியார் சொன்னபடி நான் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூசைக்கு ஆயத்தப்படுத்தத் தீர்மானித்திருக்கிறேன்.

**சிஸ்ரர்:** அதுமிகவும் மெச்சத்தக்கது. அதை இங்கே கொண்டுவா. நான் உனக்கு நாளையப் பூசையைப் பற்றி விளங்கப்படுத்திவிடுகிறேன்.

**சாந்தி:** நான் கொஞ்சம் வாசித்தேன். ஆனல் எனக்கு நன்ருக விளங்கவில்லை.

**சிஸ்ரர்:** இன்றையபூசை தேவனின் இரக்கத்தைப்பற்றித்தான் கூறுகின்றது. க்டவுள் நன்மையுள்ளவர். அவர் இரக்கமோ பெரிது. இதையே சபைச்செபமும் எடுத்துரைக்கின்றது. "சர்வேசுரா, உமது ஏராளமான இரக்கத்தால் உம்மை மன்ருடுகிறவர்களுடைய பேறுபலன்களுக்கும், வேண்டுதலுக்கும் மேலாகவே தந்தருளுகிறீர்; எங்கள்மேல் உமது இரக்கத்தைச் சம்பூரணமாய்ப் பொழிந்தருளும்." இந்த இரக்கமே எங்களுக்கு முதன்முதலாக ஞானஸ்நானத்தில் அருளப்பட்டது. ஏனெனில், அன்றுதானே எங்களுடையநாக்கு தேவனுடைய வார்த்தையைச் செய்கைகளின் மூலமும், வாக்குகளின்மூலமும் பிரசித்தப்படுத்துவதற்கு அவிழ்க்கப்பட்டது.

**சாந்தி:** தேவனுடைய இரக்கம் எப்படி இன்றைய நிருபத்தில் விளங்கப்படுத்தப் பட்டிருக்கிறது.

**சிஸ்ரர்:** இந்தநிருபத்தை எழுதும் பவுல்அப்போஸ்தலரைப் பற்றித்தான் அது குறிக்கின்றது. சவுல் என்பவர் கிறீஸ்தவர்களைக் கொலைசெய்வதற்காகத் தமாஸ்கஸ்பட்டணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் பொழுது அவரைத்தேவன் தமது இரக்கத்தினுல் மனந்திருப்பினுர். இதைப்போல் பெரிய இரக்கம் எங்குஇருக்கின்றது. நான் அப்போஸ்தலர்களில் மிகவும் சிறியவன்; சர்வேசுரனுடைய திருச்சபையை நான் துன்புறுத்தினதால், அப்போஸ்தலன் என்று அழைக்கப்படவும் நான் அபாத்திரவான். ஆயினும நான் இப்பொழுது இருக்கிறதும் சர்வேசுரனுடைய வரத்தினுல் இருக்கிறேன் என்று பவுல்அப்போஸ்தலர் கூறுகிருர். நாம் பாவம்செய்தாலும் இரக்கமுள்ள தேவன் சவுலை– அர்ச். பவுல்அப்போஸ்தலரை மாற்றினதுபோல் எங்களையும் ஒருநாள் தமதுஇரக்கத்தினுல் பரிசுத்தமாக்குவார்என்பதற்கு ஐயமில்லை.

**சாந்தி:** இன்றைய சுவிசேஷம் அதைப்பற்றி என்னகூறுகின்றது?

**சிஸ்ரர்:** அதில் எப்படிக்கிறீஸ்துநாதர் தமதுஇரக்கத்தினுல் ஊமையும், செவிடனுமான ஒருவனைக் குணப்படுத்துகிருர்என்பதை விளக்கிக்காட்டுகிறது. எங்களுடையகாதுகள் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்குத் திறக்கப்பட்டிருக்கிறது ஆகவே, நாம்தேவனுடைய வார்த்தைகளை அவதானத்துடன்கேட்டு அதன்படிநடக்கத்தெண்டிக்க வேண்டும்.

**சாந்தி:** சிஸ்ரர், தேவனுடைய இரக்கம் சுவிசேஷத்தில் மிகவும் நன்ருக ஒருபுதுமையுடன் விளங்கப்படுத்தியிருக்கிறபடியினுல் எனக்குநன்ருக விளங்குகின்றது. ஆனல், காணிக்கைக்கீதம் எப்படித் தேவனுடைய இரக்கத்தைக் காட்டுகின்றதுஎன்று எனக்கு நன்கு புலப்படவில்லை.

**சிஸ்ரர்:** அதில் தேவனின் இரக்கம், எப்படித் தேவன்தமது அணைகடந்த அன்பின்நிமித்தம் ஓர்ஆத்துமத்தை எதிரிகளிடமிருந்து கைதூக்கினுர் என்பதை விளக்கிக்காட்டுகிறது. அமைதி மன்ருட்டும் தேவனுடைய இரக்கத்தின்மூலம் எங்களுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றது. இந்தக் காணிக்கை தேவனுக்கு உகப்பாய்இருந்தால் அவர் தமது இரக்கத்தின்மூலம என்னையும், உன்னையும், மற்றும் எங்களுடைய வகுப்பில்இருக்கும் எல்லோரையும் மோட்சத்துக்கு எடுக்கப் பின்வாங்கமாட்டார்.

**சாந்தி:** சிஸ்ரர், எனக்கு இப்பொழுது நாளைய பூசையைப்பற்றி நன்ருக விளங்குகின்றது நான் இதைப்பற்றி என்னுடைய சிநேகிதர்களுக்கும் விளங்கப்படுத்தி, அவர்களை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூசைக்கு ஆயத்தப்படுத்தும்படி என்னுல் இயன்றளவு தெண்டிப்பேன். நீங்கள் எனக்குச் செய்த உதவிக்காக நாளைக்குப் பூசை நேரத்தில் உங்களுக்காக மன்ருட மறந்துபோகமாட்டேன்.

## தபால் பெறுவதற்காக 344 மைல் செல்லும் குரு

சாதாரணமாக எங்களுடைய தபாலைப்பெறுவதற்கு அல்லது தபாற்பெட்டியில் போடுவதற்காகச் சிறிதுதூரம் செல்வதற்கு வருத்தப்படுகிருேம். ஆயின் தங்கநயிக்காவிலுள்ளஒருகுரவர் தமது தபால்களைப் பெறுவதற்காக 344 மைல்கள் பிரயாணம்செய்ய வேண்டியிருக்கிறது.

அக்குரவர்தான் வண. ஞெபேட் அடிகளார். தபால்நிலையம் இவரது விசாரணைப்பங்கிலிருந்து 82 மைல் தொலைவிலுள்ளது. மழைகாலத்தில் வீதிகள் மோசமாக விருப்பதால் 172 மைல் தூரம் வேறுவழிகளால் சென்றே தபால் நிலையத்தை அடையவேண்டும். மீண்டும் இதேவழியாகத் திரும்பி தமது இல்லத்தை அடைவார்.

இவ்வித இன்னல்கட்கூடாகத் தபால் நிலையத்துக்குச் சென்ருலும சில தடவைகளில் அங்கு அவருக்குத் தபால்கள் எதுவுமே இருக்காதாம். எனினும் பொறுமையாக, புன்முறுவலுடன் திருமபுவார்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தினுலும், அர்ச். சதாசகாயமாதா, கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு அப்போஸ்தலரின் உதவியாலும் என்னுடைய வீட்டில் இருந்து காணுமற்போன 12 வயதுச் சிறுமியைக் கண்டுபிடித்துவிட்டேன் இவர்கள் நாமம் எங்கும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.

இறம்பைச்குளம், வவுனியா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வத்திக்கான் சங்கம்

சில நாட்களுக்குமுன் பாப்பானவருடைய வத்திக்கான் அரண்மனையிலிருந்து, 3000-க்கு அதிகமான பார்சல்கள் உலகமெங்கும் உள்ள மேற்றிராணிமார்களுக்கு அனுப்பப்பட்டன. ஒவ்வொரு பார்சலிலும் 119 சிறு புஸ்தகங்கள் இருந்தன; மொத்தம் 2060 பக்கங்கள் உள்ளவை. இவ்வாண்டு ஐப்பசி மாதம் 11-ம் தேதி ரோமாபுரியில் மேற்றிராணிமார்களின் பேரவை ஒன்று நடைபெறப் போகிறதல்லவா, அச்சங்கத்தின் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்களே இந்தப் புஸ்தகங்கள். இவற்றைத் தயாரித்தவர்கள் ஆயிரத்துக்கும் அதிகம்; மூன்று வருஷங்கள் பத்துத் தயாரிப்புக் குழுக்களால் சேகரிக்கப்பட்டு, ஒரு மத்திய குழுவினரால் ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட குறிப்புக்கள் இவை. இதனால் சங்கம் எவ்வளவு முக்கியமானது, அதிலிருந்து எவ்வளவு பெரும்பலன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

கத்தோலிக்க திருச்சபையில் இவ்வித சங்கங்கள் கூடுவது மிகவும் அபூர்வமான ஒரு நிகழ்ச்சி. திருச்சபை ஏற்பட்டு 20 நூற்றாண்டுகளாகின்றன; இதுவரை 20 சங்கங்களே கூடியிருக்கின்றன. இதற்கு முன் கூடிய கடைசிச் சங்கம் 1870-ம் ஆண்டு நடைபெற்றது. அதற்குப்பின் 92 ஆண்டுகளுக்குப்பின் இப்போது சங்கம் கூடப்போகிறார்கள். கத்தோலிக்கருக்கு இது எவ்வளவு அபூர்வ வைபவம்! திருச்சபையில் எவ்வளவு பெரிய நிகழ்ச்சி!

### பொதுச் சங்கங்கள் :

இவ்விதம் கூடும் சங்கத்தை "திருச்சபையின் பொதுச் சங்கம்" என்று அழைக்கிறோம். இது பாப்பானவரின் தலைமையில், மேற்றிராணிமார்களை மட்டும் உறுப்பினராகக் கொண்டது. மறைநூல் வல்லுநரும், துறவற சபைகளின் தலைவர்களும அழைக்கப்படலாம்; வேறு பிரிந்துபோன கிறிஸ்தவ சபைகளிலிருந்தும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படலாம். ஆனால், இவர்களுக்குப் பேச்சு உரிமை கிடையாது.

திருச்சபையின் அதிகார வரிசையில் உள்ளவர்கள் பாப்பானவரும் அவரோடு ஒன்றித்து நிற்கும் மேற்றிராணிமாருமே. ஆகையால், பாப்பானவரின் தலைமையின்கீழ் அகில உலக மேற்றிராணிமார்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு சங்கமே திருச்சபையின் பொதுச் சங்கம் எனப்படும். பாப்பானவர், தாமாகவோ அல்லது பிரதிநிதியின் மூலமோ தலைமை வகிக்கலாம். பாப்பானவருக்கு உரிய தவறாவரம் இச்சங்கத்துக்கும் உண்டு.

### தவறாவரம் :

தவறாவரம் என்பதுபற்றிப் பல தப்பெண்ணங்கள் கொள்பவர் அநேகர். கத்தோலிக்கர் எல்லாரும் அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்; அது ஒரு விசுவாசக் கொள்கை. ஆனால், அவர்களிலும் சிலர் அதன் தன்மையை அறிந்துகொள்வதில்லை. நமது பிரிந்துபோன சகோதரர்களோ, அதை வன்மையாக மறுத்துவருகிறார்கள்: அவர்கள் கத்தோலிக்க திருச்சபையோடு இணைவதற்கும் இது ஒரு பெரும் தடங்கல் என்று கருதப்படுகிறது. இந்தத் தவறாவரம் திருச்சபைக்கு எவ்வளவு அவசியம், அதற்குக் காரணங்கள் என்ன, அது எந்த எல்லைக்குள் அடங்கி நிற்கிறது. என்றெல்லாம் அறிந்தால், இவ்விதம் மறுத்துக்கூற மாட்டார்கள்.

திருச்சபை தவறாது என்பது நமது ஆண்டவருடைய வாக்கு. அது தவறாது என்றால், அதைத் தாங்கி அதன் அஸ்திவாரக் கல்லாக நிற்கும் அதிகாரம் தவறாது என்பதுதான் பொருள். திருச்சபையின் அதிகாரத்தைத் தாங்கி நிற்பவர்கள் பாப்பானவரும் அவரோடு ஒன்றுபட்டு நிற்கும் மேற்றிராணிமாருமே. அவர்கள் கூடிய ஒரு பேரவையும் தவறாது என்பது நியாயமல்லவா?

இவ்வித பொதுச் சங்கங்களில் சாதாரணக் குருக்களுக்கும், விசுவாசிகளுக்கும் இடமில்லையா? திருச்சபையில் பாரம்பரியமாக அர்ச். இராயப்பருக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும், அவர்களுடைய பதவியில் அவர்களுக்குப்பின் வருகிறவர்கள் பாப்பானவரும் மற்ற மேற்றிராணிமாருமே. இவர்களுக்குத்தான் திருச்சபையில் சட்டம் இயற்றும் அதிகாரம் உண்டு. குருக்கள் மேற்றிராணிமார்களின் அனுமதியுடன் திருச்சபையின் கொள்கைகளையும், அதன் ஒழுக்க முறைகளையும் மக்களுக்கு அறிவித்து, அவைகளை அமுல்படுத்துபவர்கள். திருச்சபையின் சட்டசபையில் அவர்கள் இல்லை. விசுவாசிகள் திருச்சபையின் மக்கள்; தங்களுக்குத் தந்தையும் தாயுமாய் விளங்கும் அதிகாரிகளுக்கு அமைந்து கொள்கைகளையும் ஒழுக்க வழிகளையும் கைக்கொண்டு நடப்பவர்கள். அவர்களுக்கும் திருச்சபையின் அதிகார வரிசையில் இடமில்லை.

### திருச் சங்கங்களின் வரலாறு :

திருச்சபை முழுவதும் சம்பந்தப்பட்ட பெரும் பிரச்சினைகள் எழுந்த காலத்தில்தான் இவ்வித பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டன. அப்போஸ்தலர்கள் காலத்தில் விருத்தசேதனம்பற்றிய பிரச்சினை எழுந்தது. அப்போது அப்போஸ்தலர்களும் மேற்றிராணிமாரும் அர்ச். இராயப்பர் தலைமையில் சங்கம்கூடி ஒரு தீர்மானம் செய்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடி 15-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம் இது போன்ற ஒரு பெரும் பிரச்சினை மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது. யேசுநாதரின் தெய்வீகத்தை மறுத்துச் சிலர் புரட்சி பண்ணினர். அதைத் தீர்க்குமபடி கி. பி 325 இல் நீசேநகரில் சங்கம்கூடினார்கள். இதைத்தான் முதல் சங்கம் என்கிறோம். இதையடுத்து விசுவாசக் கொள்கைகள் பற்றிய பல குழப்பங்கள் ஏற்பட்டன. நாலாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்பிரீத்துசாந்து கடவுள் அல்ல என்ற பிரிவினைக் கிளர்ச்சியை அடக்கும் பொருட்டு 381-ம் ஆண்டு இரண்டாம் சங்கம் கூடிற்று. இவ்விதமே, கிறிஸ்துநாதர் இரண்டு ஆள் என்று சிலர் சாதித்தனர்; அதன்பின் அவருக்கு ஒரே சுபாவந்தான் என்றனர் சிலர். இவ்விதம் கொள்கைகளை எதிர்த்துக் குழப்பம் ஏற்பட்டதால் எட்டு நூற்றாண்டுக்குள் ஏழு சங்கங்கள் கூடின. இந்த ஏழு சங்கங்களும் ஆசியாவில் உள்ள நகரங்களில் கூடின. அதன்பின்வந்த சங்கங்களெல்லாம் ஐரோப்பிய நகரங்களிலேயே கூடியவை. அவைகள் மூலமாகத் திருச்சபையில் எழுந்த ஒழுக்கப் பிரச்சினைகளைத் தீர்த்து, சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். புரொட்டஸ்தாந்த புரட்சிகளை அடக்கி, திருச்சபையில் பெரும் சீர்திருத்தம் செய்த முக்கியமான சங்கம், 1545-ல் திரிதந்தேன் நகரில்கூடிய மாபேரவை. இன்றும் நடைமுறையில் இருந்துவரும் பலஒழுக்க ஆசாரங்கள் இச்சங்கத்தின் சீர்திருத்தத்தால் ஏற்பட்டவை. இச்சங்கத்துக்குப்பின் 325 வருஷங்களுக்குப்பின் முதல் வத்திக்கான் சங்கம் ரோமாபுரியில் பாப்பானவரின் அரண்மனையில் கூடியது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## இவ்வார அர்ச்சியசிட்டவர்

## நிறைந்த வேத கலாநிதி

### அர்ச். அகுஸ்தினார்

### இவர் ஆபிரிக்கர் :

கத்தோலிக்க வேதத்தின் அர்ச்சிய சிஷ்டர்கள் பல இனத்தையும் சேர்ந்தவர்கள். அர்ச்சியசிஷ்ட அகஸ்தீனார் ஆபிரிக்கர். இவர் ஆபிரிக்காவில், நுமிடியாப்பிரிவில், தகஸ்தே என்னும் பட்டணத்தில் பிறந்தார். தகப்பன் ஒரு பதிதர். ஆனால், தாயார் உத்தம கத்தோலிக்க பதிவிரதை. அவள் பெயர் மொனிக்கா. தனது குண விசேஷங்களினால் பலபதித உள்ளங்களை மனந்திருப்பி இன்று அர்ச்சிய சிஷ்டராய் விளங்குகிறார். மனந்திரும்பினவர்களுள் கணவனும் அரியமகனார் அகஸ்தீனாரும் இருவராவர். அகஸ்தீனார் பிறந்த வருடம் கி. பி. 354.

### தொடக்கத்தில் இவர் பதிதர் :

இவருக்குக் குழந்தைவயதிலே ஞானஸ்நானங் கொடுக்கப்படவில்லை. அக்காலத்தில் வயதில் முதிர்ந்தபின்னரே ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம். இவரது கல்வியிலேயே தகப்பனார் கவனம் செலுத்தினார். அப்பிரதேசத்தில் உள்ள சிறந்த கலாசாலைகளில் அதிவிவேகியென 16-ம் வயதிலேயே பெயர்பெற்றுவிட்டார். ஆனால், இப்பராயத்திலே துட்ட சிநேகிதரின் சகவாசத்தினால் துர்ப்பழக்கங்களையும் கற்றுக்கொண்டார். அவரது 18-ம் பராயத்திலே தகப்பனார் இறந்துவிடத் தாயாருக்கும் குடும்பத்தவர்களுக்கும உழைக்கும பொறுப்பு ஏற்பட்டது. எனினும், இயற்கையாகவே அவருக்குக் கலைகளின்மேல இருந்த விருப்பு வளர்ந்துகொண்டேவந்தது. அக்காலத்தில் 'மனிக்கீஸ்' என்னும் பதிதமதப் பிரிவினருடன் நெருங்கி உறவாடிவந்தார். "அறிவது யாவதும் புத்தியைக் கொண்டே" என்பது அவர்களது முக்கியகொள்கை. அகஸ்தீனாரின் இளம் பராயத்தில் இக்கொள்கையில் அவர் மனம் படிந்திருந்தது. சீவனோபாயத்திற்காகக் கார்தேஜ் நகரிலும் அதன் பின்பு உரோமாபுரியிலும் கலாமன்றங்களை நிறுவி நடாத்திவந்தார். இவரது விவேகத்திறனைக் கேள்வியுற்ற சக்கரவர்த்தி அவரைத் தம்மிடம் அழைத்து மிலான் நகரத்தில் தனது கலாமன்றத்தின் போதகராக அமர்த்திக்கொண்டார்.

### தேவ அருள் கிட்டிற்று :

அக்காலத்தில் மிலான் நகர அதிமேற்றிராணியார் அர்ச்சியசிஷ்ட அம்புரோசியார். இவர் பெரும் அறிஞர். அன்புடன் எவருடனும் நடந்துகொள்ளுவார். மொனிக்கா அம்மாளின் விண்ணப்பத்துக்கு இணங்கி அகஸ்தீனார் தனது ஓய்வுநேரங்களிற் சில மணித்தியாலங்களை இந்த அறிஞருடன் செலவுசெய்துவந்தார். இருவருக்குமிடையில் நெருங்கிய அன்பு ஏற்பட்டது. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அன்றோ? இவர்களது உரையாடலினால் அகஸ்தீனாருக்கு 'மனிக்கீஸ்' பிரிவினரின் கொள்கைகளின் போலித்தன்மை தெளிவாயிற்று. கத்தோலிக்க மதத்தின் உண்மையை விளங்கிக்கொண்டாரெனினும் அவரது பழைய வாழ்க்கையின் துர்ப்பழக்க ஒழுக்கங்களை விட்டுப்பிரிவது இலேசாக இருக்கவில்லை. அவர் மனதிலே பெரும் போராட்டம் நடந்தது. மொனிக்கா அம்மாளின் செபங்கள் பயன் அளித்தன. தனது 32-ம் பராயத்தில் மனத்துணிவுடன் சத்திய மறையில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

### குருவானார் :

அன்றுமுதல் மனச்சமாதானம் ஏற்பட்டது. முதலில் மனம் இல்லறத்தை நாடிற்று. ஆனால், அச்சிந்தனைகளை அகற்றிவிட்டு முழுவதும் தேவனுக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் துணிந்துகொண்டார். தாயாரும் இறந்துவிட்டார். தனது பிறந்த நாட்டுக்குச் சென்று இளம்பராயத்தில் செய்த சில பிழைகளுக்காகப் பாடுபட மனம் ஏவிற்று. அங்குசென்று தனது ஆஸ்திகளைவிற்றுத் துறவிகளுக்கு மடங்களைநிறுவினார். ஹிப்போ நகர மேற்றிராணியார் இவரது குணவிசேஷங்களை நன்கு அறிந்தவர். இவரைத் தன்னிடம அழைத்து, தனது நகரத்திலே குருவாகித் தொண்டுசெய்யும்படி தூண்டினார். தகுந்த ஆலோசனையின்பின் அப்படியே நடந்துகொள்ளச் சம்மதித்துத் தமது 36-ம் வயதில் குருவானார். ஊரூராய்ச்சென்று பிரசங்கம் செய்வதே இவர்பிரதான கடமையாயிற்று. அநேக பதிதர் பலர் இவர் பிரசங்கங்களைக்கேட்டு மனந்திரும்பினார்கள்.

### மேற்றிராணியானார் :

ஹிப்போநகர மேற்றிராணியார் காலமானதும் அகஸ்தீனார் மேற்றிராணியாராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருடைய வயது 42. அன்றுதொடக்கம் 30 வருடகாலமாக அந்நகர மேற்றிராணியாராய்க் கடமை ஆற்றினார். தானும் தனது குருமாரும் வறுமையில் ஒழுக வழிகள்வகுத்துக்கொண்டார். ஏழைகளை அன்புடன் பராமரித்தார். அவரது ஆட்சி தொடங்கியகாலத்தில் மலிந்திருந்த பதிதமதத்தினரின் தொகை வரவரக் குன்றிவிட்டது. இவரது கல்வித்திறமையினால் திருச்சபை பெரிதும் பயனடைந்தது. இவரது திருக்கரங்களின் மூலம் தேவன் பல புதுமைகளைச் செய்துவரலானார். தமது 72-ம் வயதில் மேற்றிராசனப் பொறுப்பிலிருந்து இளைப்பாறி 490-ம் ஆண்டு மரணமாயினார்.

### இவரது விசேஷ தொண்டு :


இவரதுகாலத்திலே நிலவிவந்த பல பதித கொள்கைகளைச் சிதறடிக்கத் தேவன் அனுப்பிய சம்மட்டியாகவும், மங்கியிருந்த வேத சத்தியங்களைத் தெளிவாக்கத் தேவன் கொடுத்த நல் விளக்காகவும் இவர் விளங்கினார். இவரிடம் வேதவிளக்கம்கேட்டு எழுதிக் கொண்ட நூற்றுக்கணக்கானோருக்கு இவர்கையால் எழுதிய கடிதங்கள் போற்றற் கரிய பொக்கிஷங்களாகும். இவர் எழுதிய நூல்கள் அநேகம். அவைகளுள் விசேஷித்தன இரண்டு:

முதலாவது: (Confessions of St. Augustine) எனது பாவ அக்கிரமங்கள்.

இரண்டாவது: (Retractions of St. Augustine) நான் கூறியவற்றின் திருத்தங்கள்.

இவ்விரண்டு நூல்களும் இவரது ஆழ்ந்த தாழ்மையைக் காட்டுகின்றன. இவரது புகழைப் பேசுகிறவர்கள் இவர் எத்தகைய பாவி என்பதையும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதே முன்னதன் நோக்கம். பின்னயதில் தான் முன் எழுதிய பலவகையான நூல்களில் இருக்கக்கூடிய பிழைகளைத் தாழ்மையுடனும நேர்மையுடனும் திருத்திக் கொள்ளுகின்றார். என்னே இவரது தாழ்மை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் செல்வச் சிறுவர்களே! உங்களுக்கு என் அன்பு கனிந்த வணக்கம்.

நீங்கள் எக்காரியத்தையும் நன்கு ஆராய்ந்து, சீர்தூக்கிப்பார்த்துச் செயலாற்றவேண்டும்.

"எண்ணித்துணிக கருமம், துணிந்தபின் எண்ணுதல் இழுக்கு."

நீங்கள் செய்யத் துணியும் கருமம் கடவுளின் கற்பனைக்கும், திருச்சபையின் கட்டளைக்கும், உங்கள் கடமைகளுக்கும் பொருத்தமானதா, அன்று? என்று நன்கு ஆராயவேண்டும். செய்யத் துணியும் கருமம் நல்லதா, கெட்டதா? என்று தீர்மானிப்பதற்கு, உங்கள் புத்திக்கு ஞான வெளிச்சம் நல்கும்படி தேவனைப் பிரார்த்திக்கவேண்டும். நீங்களும் அர்ச். சின்னப்பரைப்போன்று, 'ஆண்டவரே! அடியேன் என்ன செய்யவேண்டும்?" என்று அடிக்கடி வினவவேண்டும். அத்துடன் பெரியோர்களின் யோசனையையும் உசாவவேண்டும்.

செய்யத்துணியும் கருமத்தை நன்கு ஆராயாமல், அந்த நேரத்தில் மனதில் தோன்றும் ஆசைப்படியும், உணர்ச்சி வழிப்பட்டும், வழக்கத்தின்படியும் எக்காரியத்தையுஞ் செய்யக்கூடாது. பரபரப்புடனும், நல்ல தீர்மானமின்றியும் செய்யப்படும் கருமம் சீரான முடிவு பெருது. எண்ணித் துணிந்தபின் ஒரு கருமத்தைச் செய்யுங்கால், அக்காரியம் கைகூடுமோ, கூடாதோ? என்று ஐயுறுவதுந் தவறு. பிறர் அக்கருமத்தைப் பார்த்து நகைப்பார்களோ, குறைசொல்லுவார்களோ? என்று அஞ்சுதலுந் தகாது. உலகத்தின் தீர்மானத்தைச் சட்டைபண்ணாது, ஆண்டவரின் தீர்மானந்தான் சரி என்பதை நன்கு உணரவேண்டும்.

உலகத்தோடு ஒத்துவாழவேண்டும் என்னுங் கொள்கையைப் பின்பற்றித் தேவனின் கட்டளைகளை உதாசீனஞ் செய்யலாகாது. ஏனெனில், உங்களுக்குச் சம்பாவனை அருளப்போகிறவரும், தண்டிக்கப்போகிறவரும் கடவுள். மனிதர் அல்ல.

ஆதலால், என் அன்புச் சிறுவர்களே! நீங்கள் செய்யும் எல்லாக் கருமங்களிலும் தெய்வ சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாகவிருங்கள். அப்போது தேவனுடைய சித்தம் பரமண்டலங்களிலே செயற்படுவதுபோலப் பூலோகத்திலும் செயற்படும். சருவேசுரனுக்குத் துணைக்கருவிகளாக நின்று செயலாற்றிய நீங்களும் அத்தால் உங்கள் சம்பாவனையைப் பெற்றுக்கொள்வீர்கள்.

அன்புள்ள அண்ணா.

# வினா-விடை அரங்கு

(1) சலனப்பட இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
(2) "எக்ஸ் கதிர்" இயந்திரம் யாரால், எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
(3) பல்லுள்ள பறவை எது?
(4) இலங்கையில் வெளிச்சவீடுகள் எங்கெங்கு உண்டு?
(5) இலங்கையில் முற்காலத்துத் தலைநகராயிருந்த இடங்களெவை?
(6) பப்பாமரம் எந்த நாட்டுச் செடி?
(7) ஆண்—பெண் விலங்குகளில் எவை அழகுள்ளவை?
(8) பாம்பையும், மீனையும் போன்ற நீர்ப்பிராணி எது?
(9) நரகத்தின் வேதனை நரகவாசிகள் எல்லோருக்கும் ஒரே அளவாக இருக்குமா? அல்லது வித்தியாசங்கள் உண்டா?
(10) ஒருவன் தான் சாகவேண்டுமென்று விரும்புவது பாவமா?

[ விடையை 7-ம் பக்கத்தில் காணுங்கள் ]

# செயமாலை—செபமாலை

நீற்று அமலியின் செல்வச் சிறுமி. அமலி நீற்றுவை வெகு அன்புடன் நேசித்துவந்தாள். அந்த அன்பில் அன்னைமரியின் அன்பும் பிரதிபலித்தது.

அமலி தேவஅன்னையில் மிகுந்த பத்திஉள்ளவள். தன்மகளையும்தேவ தாயின் அன்பில் வளர்த்துவந்தாள். ஒருநாளும் தவறுமல் குடும்பசெபமாலையைப் பக்தியுடன் தன் மகளுடன் சொல்லிவருவாள். தன் குடிகாரக்கணவன் மனந்திரும்ப விசேஷமாக மாதாவிடம் மன்றுடுவாள். நீற்றுவும் தன் தந்தைக்காகத் தினமும் திவ்விய பூசைப்பலியில் பங்குபற்றி மன்றுடுவாள்.

இப்படியே 15 வருடங்கள் உருண்டோடின. கணவனைப்பற்றிய கவலையால் அமலி உருக்குலைந்து நோய்வாய்ப்பட்டாள். தன் மரணவேளை சமீபித்ததை அறிந்த அமலி தன் நேசமகளை அழைத்து: "மகளே! செபமாலையை எப்போதும் பத்தியுடன் சொல்லிவா. உன் தந்தையை அன்னைமரி கைவிடமாட்டா. என்று சொல்லி அவளை அணைத்து முத்தமிட்டாள்.

தன்தாயின் பரிதாப நிலையைக் கண்ட நீற்று குருவானவரிடம் ஓடிச்சென்று, அவரை அழைத்துவந்து அந்திய தேவதிரவிய அநுமானங்களை நல்லறிவுடன் பெறச்செய்தாள். கொஞ்சநேரத்துள் அமலியின் ஆன்மா தன் இதயஅன்பரின் இன்பமாளிகைக்குப் பறந்துசென்றது.

நீற்று தாயின் சடலத்தைக்கண்டதும் விழுந்து அழுது புலம்பினுள். என்னசெய்வது! தேவனின் சித்தம் இதுஎன்று மனதை ஒருவாறுதேற்றிக்கொண்டாள்.

தந்தைக்கோ இவ்வளவுகாலமும் அமலியைப்பற்றிய சிந்தனை இல்லை. அவள் இறந்தசெய்திகேட்டு ஓடோடி வந்தான் வீட்டிற்கு. அப்போதும் அவனது கல்நெஞ்சம் இளகவில்லை. மனைவிஎன்ற முறையில் ஐந்தாறு சொட்டுக்கண்ணீர்விட்டான். செய்யவேண்டிய ஈமக்கடன்களைச்செய்து முடித்தான்.

நீற்றுவோ, தாய்சொல்லிக்கொடுத்த அந்த வாடாதமாலையை மறக்கவில்லை. தந்தையின் மனந்திரும்புதலுக்காகவும் தாயின் ஆன்ம சாந்திக்காகவும் மன்றுட மறக்கவில்லை.

இப்படியே மூன்று ஆண்டுகள் கடந்தன. இளமை அழகுஜொலிக்கும் நீற்றுவைப் பல ஆடவரின் கண்கள் கவர்ந்தன. ஆனால் அவள் அழகுள்ளவனையல்ல, பணமுள்ளவனையல்ல, நல்லகுணமுள்ளவனையே தன் தலைவனுக்க விரும்பினுள். அவளின் இதயத்தில் நற்குணசீலனை ஜெயாவே பதிந்துவிட்டான். ஜெயாவின் நெஞ்சிலும் நற்குணசீலியான நீற்றுவே பதிந்துவிட்டாள்.

ஆனால், நீற்றுவின் தகப்பனே அதற்கு மாருகத் தன்னைப்போன்ற குடிகாரனுகிய நாதனையே மகளின் தலைவனுக்க விரும்பினுன்.

தந்தையின் எண்ணத்தை அறிந்த நீற்று, தன் தந்தையின் மனந்திரும்புதலுக்காகவும், தனது நல்வாழ்வைப் பூர்த்தியாக்கக்கூடிய ஜெயாவைத் தான் அடையவேண்டும் என்பதற்காகவும் அன்னைமரியிடம் அநுதினமும் மன்றுடிவந்தாள்.

நீற்றுவின் மன்றுட்டை மாதா மறுக்கவில்லை. அவளின்மேல் தன் கருணைக்கண்ணைத் திருப்பினு. தந்தையும் தன் கெட்டவாழ்வைத் திருத்தித் தன் மகளின் நல்வாழ்வையும் விரும்பினுர். தான் இனிமேல் உத்தமனுகவாழ்வதென்று உறுதியும் பூண்டார்.

மாதாவின் தாய்மைத்திருநாளன்று, ஜெயாவிற்கும்நீற்றுவுக்கும் திருமணம் சிறப்பாகநடைபெற்றது. நீற்றுவின் முகத்தைப்பார்க்கவேண்டுமா? தன் வாழ்வை வளம்படுத்தித் தன் தந்தைக்கும் நல்வழிகாட்டிய அன்னைமரிக்குத் தன் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்து நின்றுள்.

"செபத்தால் ஆகாதது ஒன்றுமில்லை."

S. தவமணி.

## நற்சிந்தனை

உன்வாழ்வின் நோக்கத்தை அறிய உன்னாலான பிரயாசைப்படு. இவ்வுலக வாழ்க்கையானது ஒரு பிரயாணம். நீடித்திருக்கக்கூடிய வாசஸ்தலம் இந்தப் பூமியில் உனக்குக் கிடையாது. நித்தியமாக நிலைக்கக்கூடிய உன்வாசஸ்தலம் மோட்சத்திலேயே இருக்கிறது. அங்குபோய்ச் சேர நீ செய்யும் பிரயாணத்தின் முடிவு உன் மரணம். சாவு வாழ்வின் முடிவல்ல. நீ உன் நித்திய வீட்டினுள் நுழையும் வாசல் அது.

கடவுளை அறிந்து, நேசித்துச் சேவிக்கவும், அதனால் மோட்ச இன்பத்தைப் பெற்றுக்கொள்ளவும் நீ செயலாற்றக் கொடுக்கப்பட்டிருக்கும் காலமே உன் வாழ்நாள். நீ பெறும் மோட்ச இன்பத்தின் தன்மையும், அளவும் நீ கடவுளுக்குச் செய்திருக்கும் சேவையின் தன்மையையும், அளவையும் பொறுத்தது. நீ அதிகஞ் செய்தால் அதிகம் பெற்றுக்கொள்வாய். சொற்பமாய்ச் செய்தால் சொற்பமாகப் பெற்றுக்கொள்வாய். அவரைச் சேவிக்க நீ மறுப்பாயானுல், நீ மோட்சத்தினின்று ஒதுக்கப்பட்டு, நரகத்தின் அவியாத நெருப்பில் நித்தியத்துக்கும் வேதனைப்படத் தீர்ப்பிடப்படுவாய்.

# முட்டாள் சுப்பன்

உடுப்பிட்டியிலே பொன்னுத்துரை என்ற பெரியகமக்காரர் ஒருவர்இருந்தார். அவருக்கு ஏராளமான காணிபூமி வயல்நிலங்கள், ஆடுமாடுகள்உண்டு. அவரை முதலாளிஎன்றே எல்லோரும் அழைப்பர்.

அவருக்குச் சுப்பன் என்ெருரு வேலைக்காரன் இருந்தான். அவன் பாடசாலைப் புறக்கதவையும் பார்த்தறியாதவன். அவனுடைய புத்தியோ மிகவும் மந்தமானது.

ஒருநாள் பொன்னுத்துரை முதலாளி தன் நண்பன் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, சுப்பன் ஓடோடிவந்து "ஐயா எங்கள் வெள்ளைப்பசு ஒரு நாம்பன்கன்று போட்டிருக்கிறது" என்று பலத்தசத்தமாகச் சொன்னுன். முதலாளிக்கு மிகவும் கோபம்வந்துவிட்டது. ஏனெனில், அவரும், அவர் நண்பனும் நடத்திய சம்பாஷணையை முட்டாள் சுப்பன் குழப்பிவிட்டானல்லவா? என்றாலும் சுப்பனைக் கூப்பிட்டு "அடே மடையா! இனிமேல் நான் யாருடனும் கதைத்துக்கொண்டிருக்கும்போது நீ ஏதும் சொல்லவேண்டுமாகில் அமைதியாகவந்து நிற்கவேண்டும். நான் உனக்கு 'பேசலாம்' என்று சொல்லுமட்டும், 'என்னடா' என்று கேட்குமட்டும் நீ ஒன்றும் சொல்லக்கூடாது" என்று கட்டளை இட்டார்.

சிலநாட்களுக்குப்பின் பொன்னுத்துரை முதலாளியின் மூன்றுவயதுள்ள ஒரே ஒரு ஆண்குழந்தையான முத்துத்தம்பி கிணற்றடியில் விளையாடிக்கொண்டிருக்கும்போது தற்செயலாய்க் கால்சறுக்கி அதனுள்விழுந்துவிட்டான். இதனைக்கண்ட அவனுடைய தாய் பதைபதைத்துச் சுப்பனைப் போய் உடனே ஐயாவைக் கூட்டிவருமாறு பணித்தாள். சுப்பன் உடனே முதலாளி இருந்த வயலுக்கு ஓடிப்போனுன். அங்கு அறுவடைகாலமாயிருந்தபடியால் முதலாளி அங்குமிங்கும் சென்று பலவேலைகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்தார். சுப்பன் ஓடோடிச்சென்று ஒருவரம்பில் அமைதியாக உட்கார்ந்துகொண்டு முதலாளியைப் பார்த்தான். சற்று நேரத்துக்குப்பின் "என்னடா வந்தது? என்றுகேட்டார்" முதலாளி! "தம்பி முத்துத்தம்பி கிணற்றுள் விழுந்துவிட்டான்" என்று அம்மா அறிவிக்கச் சொன்னவ என்று மிகவும் ஆறுதலாகக் கூறினுன். முதலாளியின் மனவருத்தத்திற்கோ அளவில்லை. ஒரே ஒரு மகனல்லவா! ஓடோடி வீட்டுக்குச் சென்றார். ஆனால், [illegible] மறைந்த சம்பவத்தை மனவருத்தத்துடன் அறிந்தார்.

அந்நாட்தொட்டுச் சுப்பனை வெளிவேலைகளுக்கு அனுப்பி அவனுக்குச் சொன்னதாவது: "அடே சுப்பா! இப்படியான பிரமாதமான சம்பவங்கள் நடந்தால் ஓடோடிவந்து எனக்கு நேரே சொல்லவேண்டும். எவ்வித தாமதமும் ஏற்படக்கூடாது. விளங்கினதா?" என்று பணித்தார்.

அதன்படியே சுப்பன் வயலிலுள்ள சூட்டுக்கும்பங்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் விடப்பட்டான். ஒருநாள் [illegible] தெருவால் துவிச்சக்கர

(தொடர்ச்சி 3-ம்பக்கம்)

## மின்மினி மீன்

மின் மினிப்பூச்சியை எல்லோரும் கண்டிருப்பீர்கள். இரவிலே மின்மினிப்பூச்சி பறக்கும்போது அழகாயிருக்கும். இருட்டிலே வழிதெரிவதற்கு "மின்சூழ்" அதாவது டோர்ச் உபயோகிக்கிறேம் அல்லவா? அதுபோல இருட்டிலே இரை தேடுவதற்கு ஒருமீன் "டோர்ச்" உபயோகிக்கிறதாம். ஆழ்கடலின் அடியில் ஒரே இருளாயிருக்கும். ஆங்க்ளர் என்பது ஆழ்கடல் மீன்களில் ஒருவகை. இதன் தலையில், வாயின் மேற்பாகத்தில் தூண்டில் போன்ற ஓர் உறுப்புநீண்டிருக்கிறது. இருட்டில் மின்மினிப்பூச்சி பளிச்சிடுவதைப்போல, இந்த நீண்டிருக்கும் உறுப்பில் இருந்து ஒளி உண்டாகிறது. இந்தப் பளபளப்பினுல் கவரப்பட்டு மற்றமீன்கள் இதன் அருகே ஓடிவருகின்றன. உடனே இந்தமீன் அவைகளை விழுங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகில்

### பிரான்ஸ்

பிரான்சிலுள்ள கத்தோலிக்க மக்களால் உபகரிக்கப்பட்ட 50,00,000 பவுண்களைக்கொண்டு உலகமுழுவதிலும் பசியாலும், பட்டினியாலும் அந்தரிக்கும் அகதிகளை ஆதரிக்கும் ஸ்தாபனமொன்றைப் பிராஞ்சிய மேற்றிராணிமார்கள் நிறுவியுள்ளனர்.

### இந்தோனிசியா

இந்தோனிசியாவில் அப்போஸ்தலிக்க ஸ்தானிகராகக் கடமையாற்றிவந்த மரியா பிரினி அதிமேற்றிராணியார் பரிசுத்த தந்தையால் ஐக்கிய அரபுக் குடியரசின் பாப்புவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### இத்தாலி

இத்தாலியில் ஏழைக்குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 45 சிறுவர் சிறுமியர்கள் இங்கிலாந்தில் எட்டு வாரம் உல்லாசமாகக் களிப்பதற்காக அண்மையில் அனுப்பப்பட்டுள்ளனர். பாப்பரசரது அகதி நிவாரணச்சங்கமும் பிரித்தானிய அகதிநிலையங்களும் கூட்டாகச்சேர்ந்து இந்தத்திட்டத்தை அமுல்நடாத்துகின்றன.

### பத்திமா

தாய்மாரின் கரங்களிலேந்தப்பட்ட குழந்தைகள், சிறுவர்சிறுமிகள், இளைஞர்கள், வாலிபர்கள், கன்னிப்பெண்களாக முப்பதாயிரத்துக்குமதிகமான இளம் யாத்திரிகர்கள் அண்மையில் பத்திமாபதியில் கூடி வரப்போகும் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்காக விசேட வழிபாடுகளியற்றினர்.

### இந்தியானு

ஐக்கியஅமரிக்காவின் இந்தியானு மாகாணத்தில் உள்ள நோட்டரிடாம் சர்வகலாசாலையைச்சேர்ந்த 22 மாணவர்கள் இந்தவிடுமுறையில் லத்தின் அமரிக்காவில் இல்லற அப்போஸ்தலிக்க தொண்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### ஸ்கொத்லாந்து

குழந்தைகள் பராமரிப்பு சம்பந்தமாக ஆலோசனையளிக்கவும் உதவவும் தக்க குழுவொன்றை ஸ்கொத்லாந்தின் கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகள் நிறுவியுள்ளனர். ஸ்கொத்லாந்தின் மிகப்பெரிய கைத்தொழில் நகரமான கிளாஸ்கோவில் இக்குழுவின் தலைமைக்காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

# 2-வது வத்திக்கான்சங்கம்

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

பாப்பானவரின் தவறுவரம்பற்றிய வரையறுத்த கொள்கை இச்சங்கத்திலேயே உருவாயிற்று. 1869-ம் வருஷம் மார்கழி மாதம் 8-ம்தேதி ஆரம்பித்த இச்சங்கம், முடிவடைவதற்கு முன்பு, 1870-ம் வருஷம் ஐப்பசிமாதம் 20-ம்தேதி ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. கலகக்காரர் பாப்பானவரின் ஆட்சி நாட்டுக்குள் புகுந்து விட்டபடியால் சங்கம் தொடர்ந்து நடக்க முடியவில்லை. சங்கத்துக்காகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களில் அநேகம் ஆராயப்படவில்லை.

**இப்போது சங்கம் கூடக்காரணம் :**

முதல் வத்திக்கான் சங்கத்தில் ஆராயப்படாத பல விஷயங்கள், காலாவட்டத்தில் திருச்சபை பரிசுத்த ஸ்தானத்தின் கவனத்துக்குப் பலமுறையும் வந்தன. தவிர காலமாறுபாட்டாலும், அரசியல், விஞ்ஞான, சமூக மாற்றங்களை முன்னிட்டு, திருச்சபை நடபடிக்கைகளிலும், சுருக்க வழிகளிலும் பல மாற்றங்களும், புது நடபடிக்கைகளும் தேவை என்று பலரும் உணர்ந்தார்கள். நாஸ்தீகத்தின் வளர்ச்சியாலும், லோகாயதக் கொள்கையாலும், உலகமெங்குமே ஆன்மீகவாழ்க்கை பாழ்பட்டுவருகிறது: திருச்சபைக்கும் பெரும் நெருக்கடி. இதனால், கிறிஸ்தவ குடும்பவாழ்க்கை, சன்மார்க்க ஒழுக்கம் இவைகள்பற்றிப் பல பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. போக்குவரத்துச் சாதனங்களும், நாட்டுக்கு நாடு தொடர்பும் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கும் இந்நாளில், திருச்சபையின் மத்திய ஸ்தாபனங்களுக்கும் மேற்றிராசன ஸ்தாபனங்களுக்கும் உள்ள உறவை மாற்றி அமைப்பதும் அவசியம் எனக் கருதப்படுகிறது. தவிர, திருவழிபாட்டு முறைகளும் மக்களின் வாழ்க்கைநிலை, மனோபாவங்களின் மாற்றம், இவற்றிற்கேற்றபடி திருத்தப்பட வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். இவைகளெல்லாம் இரண்டாவது வத்திக்கான் சங்கத்துக்குக் காரணங்கள்.

தவிர, திருச்சபையை விட்டுப் பிரிந்துபோய் இருக்கும் இதர கிறிஸ்தவ சபைகள் மத்தியில், எல்லாரும் ஒன்றுபட வேண்டும் என்ற பெரும் இயக்கம் ஒன்று உருவாகியிருக்கிறது. கடந்த ஐப்பசிமாதம் புதுடில்லியில் நடந்த உலகக் கிறிஸ்தவ சபைகளின் மாநாட்டைப்பற்றி அறியாதவர்கள் யார்? அந்த ஒற்றுமை இயக்கத்தின் பயனுகக்கூடிய பெரிய கிறிஸ்தவ மாநாடு இது. அவர்களில் பலர் மனதிலும், கத்தோலிக்க சபையோடு ஒன்றிப்பது ஒன்றுதான் உண்மையான ஒன்றிப்பு என்ற எண்ணம் எழாமல் போகவில்லை. இதில் கத்தோலிக்கர் எவ்விதம் உதவி புரியலாம் என்ற விஷயமும் சங்கத்தில் ஆராயப்படலாம். கிறிஸ்தவ ஒன்றிப்புக்குச் சாதகமான வழிவகைகளை ஆராயும்படி நம் பரிசுத்த தந்தை ஒரு குழு ஒன்றை நிறுவியிருக்கிறார். இக்குழுவின் தலைவர் வந். கர்தினல் பெயா ஆண்டவர் அவர்கள்.

ஆனால், சங்கத்தின் பிரதான நோக்கம்: கிறிஸ்தவ வாழ்க்கையில் அதிக தூய்மையடைவதும், திருச்சபையின் வளர்ச்சியுமே.

**நமது கடமை :**

இந்தத் திருச்சங்கம் நல்லபலன் தருமபடி பிரார்த்திப்பதே நமது முதல் கடமை. பாப்பானவரே ஒரு செபம் எழுதிக் கொடுத்திருக்கிறார்; அதை எலலாக் கிறிஸ்தவ மக்களும சொல்லிவரவேண்டும் என்பது அவருடைய நோக்கம். தவிர, சமீபத்தில் ஒரு பொது திருபமும எழுதி, விசுவாசிகள் அனைவரும் சங்கத்தின் வெற்றிக்காக செபமும், தபமும் செய்துவரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். நமது மேற்றிராணிமாரும் நாம் என்ன செய்யவேண்டும் என்று, குருக்கள் மூலம், நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றிற்கு நாம் செவிசாய்த்து, போதகாகள் அனைவரிலும் உத்தமராகிய இஸ்பிரீத்துசாந்து, சங்கத்தின் பிதாக்களின்மீது தமது வரங்களைப் பொழிந்தருளும்படி மன்றாடுவோம். அதோடு நமது பரிசுத்த தந்தை விரும்புவதுபோல், நம்மைப் புனிதப்படுத்திக் கொண்டு, சங்கத்தின் தீர்மானங்களை நேர்மையோடு ஏற்று, உவகையோடு நிறைவேற்றுவதற்கான மனஉறுதியையும் அந்த தேற்றுகிறவராகிற சர்வேசுரனிடம் கேட்போம.

[கத். சே[illegible]

## விடைகள்

(1) 1893-ல் ‘எடிகன்’ என்பவர் கண்டுபிடித்தார்.
(2) ‘றெண்ட்சென்’ என்னும் ஜேர்மனியரால் 1895-ல் கண்டுபிடிக்கப்பட்டது.
(3) வெளவால்.
(4) காங்கேசன்துறை, கோவளம், கொழும்பு, காலி, திரிகோணமலை, மட்டக்களப்பு, முலலைத்தீவு.
(5) அனுராதபுரம், பொல்லனறுவை, சிகிரியா, யப்பாகு, கம்பளை.
(6) அமெரிக்கநாட்டுச் செடி.
(7) ஆண்விலங்குகளே.
(8) விலாங்கு.
(9) நரகவாசிகள் எல்லோருக்கும் சருவேசுரனைத் தரிசிக்க முடியாத துன்பமும், நித்திய அக்கினியும் பொதுவானது. ஆனால், வேதனைகளின் கொடுமை அவனவன் பாவங்களின் கனத்துக்கும், எண்ணிக்கைக்கும் தக்காப்போலிருக்கும். நரக நெருப்பு உடலின் பற்பல உறுப்புக்களிலும் ஊடுருவி, அதிக குற்றமுள்ளது எதுவோ அதை அதிகமாய் எரிக்கும் என்று அர்ச். அகுஸ்தீன் கூறுகிறார். பாவி கட்டிக்கொண்ட பற்பல பாவங்களுக்கு ஏற்றாற்போல அவனுக்குப் பற்பல வேதனைகளும் இருக்கும்.
(10) ஒருவன் அவநம்பிக்கையால், மனத்தளர்ச்சியால் தான் சாகவேண்டுமென்று விரும்புவானுகில், அது பாவமாகும். இவ்வுலகைவிட்டு விரைவில் கடவுளது திருவடிகளைச் சேரவேண்டுமென்னும் ஆசையினால் தன் சாவை விரும்புவானுகில், அது பாவமில்லை.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## இல. M. B. 2646

புத்தூர் கிழக்கு
1. எஸ். வைத்திலிங்கமும், பெண்
2. தெய்வானையும்
—பதில்வழக்காளிகள்

எதிராக
சிறுப்பிட்டி
மயில்வாகனம் சிறிபத்மநாதன்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2646-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக் காணிகள் 1962-ம் வருடம் ஐப்பசிமாதம் 13-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6,762/-ம், 16-1-59 தொடக்கம் 21-3-62 வரைக்கும் ரூபா 5,000-க்கு 9 வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 319 ரூபா 42 சதமும்.

### ஆதனங்களின் விபரம்

(1) வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர்க் கோயிற்பற்று, சிறுப்பிட்டி இறை, “கூளப்பறகு தோட்டமும் - நிலமும்” பர. நில. இலா. $17\frac{3}{8}$. இதில் மேற்குப் பக்கமாக ப. நி. இ. 13 (பதின்மூன்று)ம், வடக்கெல்லைக்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கும், தெற்கும் — வைத்திலிங்கம் கைம்பெண் தெய்வானைப் பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு — தம்பையா கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம். மேற்கு — பொன்னுச்சாமி மயில்வாகனத்தின் உரிமையாளருக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கு.

(2) வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய்க் கோயிற்பற்று, நீர்வேலி இறை, “தட்டான்திட்டம்” பர. நெல் இலா $28\frac{1}{2}$. எல்லை: கிழக்கும், வடக்கும் சிறுப்பிட்டிக் கிராம எல்லைகள். மேற்கு—குமாரசாமி பெண் செல்லாச்சிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு—பொன்னுச்சாமி வைத்திலிங்கத்தின் உரிமையாளருக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கு.

(3) மேர்படி இறை “தட்டான் திட்டம்” பர. நெல் இலா. $56\frac{1}{4}$. எல்லை: கிழக்கும், தெற்கும் — பொன்னுச்சாமி மயில்வாகனத்தின் உரிமையாளருக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு — சிறுப்பிட்டிக் கிராம எல்லை. மேற்கு —வயிரமுத்து பெண் சிவகாமசுந்தரத்தின் உரிமையாளருக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கு.

(4) வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர்க் கோயிற்பற்று, சிறுப்பிட்டி இறை “குஞ்சிப்புலமும், குஞ்சிப்புலம் தோட்டமும், பன்னலை தம்பன் தோட்டமும்” பர. நில. இலா. 19-ம், கிணறும், பயிர் வகைகளும். எல்லை: கிழக்கு — கதிரவேலு வல்லிபுரத்துக்குரிய ஆதனம். வடக்கு—வேலாயுதர் பெண் பத்தாதைப் பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு—வெற்றிவேலு கதிர்காமரின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு — சிறுப்பிட்டிக் கிராம எல்லை. இதில் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கு.

(5) மேற்படி இறை, “கூளபறகுத் தோட்டமும், மால் விளமும், கூளக்கலட்டியும்” பர. நில. இலாச்சம் 30. இதற்கு எல்லை: கிழக்கும், மேற்கும் — பி. மயில்வாகனத்தின் உரிமையாளருக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு — சிறுப்பிட்டி, செல்லப் பிள்ளையார் கோவிலின் ஆதனம். தெற்கு — தம்பையா சுப்பிரமணியத்துக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{16}$ பங்கு.

(6) மேற்படி இறை, “மால்லடிப்பதி தோட்டமும், நிலமும்” பர. நில. இ. 6 (ஆறு). எல்லை: கிழக்கு — கதிர்காமர் கந்தையாவுக்குரிய ஆதனம். வடக்கு—மயில்வாகனம் பெண் இராமநாதபிள்ளையின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — சின்னையா மயில்வாகனத்தின் ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும், கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
16A, அம்மன்ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 143/62.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்கு 8 வருடமாக இருந்த ஓயாத கொடிய தலைவலியும், $1\frac{1}{2}$ வருடமாக இருந்த எரிவும் அர்ச் செபஸ்தியாரிடம் வேண்டிக்கொண்ட உடனே முற்றாக நீங்கிவிட்டது. அர்ச். காணிக்கைமாதாவே! மேலும் நான் அர்ச் செபஸ்தியாரிடம் கேட்ட மன்றாட்டுகள் கிடைக்கக் கிருபை செய்வீராக! பிரசுர தாமதத்துக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

146/62. ஓர் அடியாள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் பரிசுத்த திருமுகத்தினிடம் வேண்டிக்கொண்டபின் எங்களுடைய குடும்பத்துக்கு வாவிருந்த பெரிய ஆபத்து புதுமையாய் இரண்டு செவ்வாய்க்கிழமைகளில் முற்றாக நீங்கிவிட்டது மேலும் அவரிடம் கேட்ட மன்றாட்டுகள் கிடைக்க கிருபை செய்வாராக! யேசுவின் பரி. திருமுகம் எங்கும் ஸ்துதி பெறக்கடவதாக!

146/62. ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனா

## திருச்சபையின் இளவரசர்கள்

திருச்சபையின் இளவரசர்கள் சம்பந்தமாக நாம் ஒரு வினாவை அறிவித்த பின்னர் மற்றொரு கர்தினாலும் காலமாகிவிட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது. எனவே திருச்சபையின் கர்தினால்களின் இன்றைய தொகை 85 ஆகும். விபரம் இதோ தரப்படுகின்றது.

கனடா 2, ஐக்கிய அமெரிக்கா 5, மெக்சிக்கோ 1, கொலம்பியா 1, எக்குவடோர் 1, பெரு 1, சிலி 1, இங்கிலாந்து 1, ஸ்கொத்திலாந்து 1, அயர்லாந்து 2, ஸ்பெயின் 6, போர்த்துக்கல் 2, கியூபா 1, வெனிசுவலா 1, பிறேசில் 3, உருகுவே 1, ஆர்ஜென்ரீனா 2, பெல்சியம 1, ஒல்லாந்து 1, போலாந்து 1, அவுஸ்திரியா 1, கங்கேரி 1, ஆர்மினியா 1, பிரான்ஸ் 8, ஜெர்மனி 3, இத்தாலி 28, சீரியா 2, இந்தியா 1, தங்கயிக்கா-ஆபிரிக்கா 1, சீனா 1, யப்பான் 1, பிலிப்பைன்ஸ் 1, அவுஸ்திரேலியா 1.

## நரகத்தில் அதிகாரமில்லை

பிரபல ஓவிய நிபுணர் மைக்கல் அஞ்சலோபற்றிய சம்பவமொன்றை அண்மையில் பிரபல பத்திரிகை ஒன்றிலிருந்து வாசிக்க நேர்ந்தது. அச்சுவையான சம்பவத்தை உங்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

மூன்றாவது போல் பாப்பரசர் காலத்தில் இராயப்பர் தேவாலயத்துக்காக கடைசித் தீர்வை என்ற ஓவியத்தை வரையுமாறு மைக்கல் அஞ்சலோ கேட்டுக்கொள்ளப்பட்டார். ஓவியர் அச்சித்திரத்தை வரைந்துகொண்டிருக்கும்போது அங்கு அடிக்கடி விஜயஞ்செய்த பாப்பரசரின் வைபவங்களைத் துக்கும் பொறுப்பான மொன்சிஞ்ஞோர் கசேனா அவர்கள் மிகப் புனிதம வாய்ந்த அவ்வோவியத்தில் சில இடங்களில் ஆபாச உருவங்கள் காணப்படுவதுபற்றிக் குறிப்புரைகள் கூறினாராம். பல தடவைகள் இவ்வித குறிப்புரைகளைக் கேட்டதால் பொறுமையிழந்த ஓவியர் அஞ்சலோ நரகத்தின் வாயிலில் நிற்பதாகச் சித்திரிக்கப்படும் பசாசின் உருவத்தைக் கீறும்போது மேற்படி மொன்சிஞ்ஞோரின் முக உருவத்தை அங்கு சித்திரித்துவிட்டார்.

இதனால் மனவேதனையடைந்த மொன்சிஞ்ஞோர் பாப்பரசரிடம் சென்று முறையிட்டார். நகைச்சுவை நிரம்பிய மூன்றாவது போல் பாப்பரசர் பின்வருமாறு பதிலளித்தார். அந்த ஓவியர் உம்மை உத்தரிப்புஸ்தலத்தில் தள்ளியிருந்தால் எமது அதிகாரங்களை உபயோகித்து அங்கிருந்து உம்மை வெளியேற்றலாம். ஆயின் நரகத்தின் மீது எமக்கு அதிகாரமெதுவும் அளிக்கப்படவில்லையே.

## யூபிலி விழாக்கள்

அண்மையில் இலங்கை மரியாயின் சேனையார் கொழும்பில் தங்கள் இருபத்தைந்தாவது வெள்ளி யூபிலி விழாவைக் கொண்டாடினார்களல்லவா? அதைத் தொடர்ந்து ஒவ்வொருபகுதியிலுமுள்ள கியூரியாக்களும் கமிசியங்களும் இந்த யூபிலியைத் தங்கள் தங்கள் பகுதிகளிலும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என எமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக் கமிசியம் இவ்வருடக் கடைசியில் தனது விழாவை நடத்தும். இளவாலைக் கியூரியா அடுத்த புரட்டாதிமாசக் கடைசியில் யூபிலி விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிவிட்டது.

## குப்பைகள் வேண்டாம்

இலங்கைச் சர்வகலாசாலையில் கல்வி பயிலும் மாணவரொருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். ஆபாசங்கள் நிரம்பிய ஏடுகள், பொதுவுடைமைக் கொள்கைகளை விளக்கும் வாரப்பத்திரிகைகள் எல்லாம் சர்வகலாசாலை மாணவரிடையே சர்வசாதாரணமாகக் காணப்படுகின்றதாம். மாலைநேரங்களில் பட்டதாரி மாணவர்களே பெருமுயற்சியெடுத்துக்கொண்டு இவற்றைக் கொண்டுவந்து அறைக் கதவுகளைத் தட்டி வியாபாரம் நடாத்துவார்களாம். இந்த மாணவரும் அங்கு சேர்ந்த சில தினங்களின் பின்னர் ஓர் இரவில் கதவு தட்டப்பட்டதாம். கதவைத் திறந்து பார்த்தபோது நாம் மேற்கூறிய பத்திரிகைகளை விற்பனை செய்யும் தொண்டர்கள் நின்றுகொண்டிருந்தார்களாம். நாங்கள் குப்பை கூளங்களையெல்லாம் வாசிப்பதில்லை என முகத்திலடித்தாற்போல இந்த மாணவர் கூறிவிட்டாராம். அந்த நிகழ்ச்சியின் பின்னர் இப்பத்திரிகை விற்பனையாளர்களால் அவருக்குத் தொந்தரவு எதுவுமில்லையாம். வருமுன் காப்பவரான இந்தக் கத்தோலிக்க வாலிபர் நமது பாராட்டுதலுக்குரியவரல்லவா?

## பாதுகாவலன் விற்கும் இளைஞர்கள்

பொதுவுடைமைப் பத்திரிகைகளை விற்பதில் இளந்தொண்டர்கள் காட்டும் ஆர்வத்தைப்பற்றி யான் எண்ணும் போதெல்லாம் கத்தோலிக்க இளைஞர்கள் கத்தோலிக்க பிரசுரங்களை விற்பதில் இவ்வித முயற்சி எடுப்பதில்லையே என எண்ணி வருந்தியதுண்டு. ஆயின் அண்மையில் ஒரு கிராமத்தில் யான் கண்ட நிகழ்ச்சி என் மன எண்ணத்தை மாற்றிவிட்டது

அன்று வியாழக்கிழமை மாலை ஐந்தரை மணி. இரண்டு இளைஞர்கள் ஒரு கட்டு பாதுகாவலன் பிரதிகளுடன் வீடுவீடாகச் சென்றுகொண்டிருந்தனர். வியாழக்கிழமை மாலைதோறும் இக்கிராமத்தில் பாதுகாவலன் பிரதிகள் விற்பனை செய்யப்படுகின்றனவென்று எனக்கு அறிவிக்கப்பட்டது. முன்னர் இக்கிராமத்தில் பத்துப் பாதுகாவலன் பிரதிகள்தான் விற்கப்பட்டதாம். சில வாரங்கட்கு முன்னர் கட்டளைக்குரவர் மரியாயின் சேனையாளரிடத்தில் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தாராம். மரியாயின் சேனையாளர் அக்கிராமத்தை இரண்டு வட்டாரங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பத்திரிகைகளைக் கொடுத்து உடனுக்குடனே பணம் பெற்றுக் கொள்ளும்படி இரு அங்கத்தவர்களை நியமித்துள்ளனராம். இப்போது வாராவாரம் 50 பிரதிகள் விற்கப்படுகின்றன எனவும் அறிந்தேன். இந்த இளைஞர்களின் முயற்சியை மற்றைய சைனியங்களும பின்பற்றினால் பாதுகாவலன் விற்பனையில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தலாமல்லவா?

## நகைச்சுவை

காவலாளி:—பையா இந்த இடத்தில் மீன் பிடிக்கக்கூடாதென உனக்குத் தெரியாதா?

பையன்:—நான் பிடிக்கவில்லை ஐயா. மீன்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கிறேன். எனது தூண்டிலைப் போட்டதும் மீன்கள் துள்ளிக்கொண்டு ஓடுவதை நீங்கள் பார்க்கவில்லையா?

## மனம் நிறைந்த செல்வம்

சம்பாஷணை முடிந்தபின் பணக்காரியான அந்த மாது பளபளக்கும் தனது டிசாட்டோ காரை இயக்கிக்கொண்டு வெளியேறுவதை அவளின் சிநேகிதியான அந்த வீட்டுக்காரி பார்த்துக் கொண்டிருந்தாள். சிநேகிதியின் செல்வத்தை எண்ணி மனைவி கவலைப்படக் கூடுமென எண்ணி அன்புக் கணவன் பக்கத்தில் வந்தான். கண்ணே இன்னும் சில காலத்தில் நாங்களும் செல்வந்தர்களாவோம் என்றான்.

இப்போதும் [illegible] நாங்கள் மனம் நிறைந்த செல்வத்துடன் தான் வசிக்கிறோம். சில காலம் செல்லப் பணக்காரர்களாவோம் என்று கூறுங்கள் எனப் புன்னகையுடன் கூறினாள் அந்த மனம் நிறைந்தவள்.

இந்த மனநிறைவு எல்லா இல்லத்தரசிகட்கும் கிடைக்குமா?

## இவ்வார வினா

திருச்சபையை அரசாண்ட பாப்பரசர்கள் சம்பந்தமாக இவ்வார வினா அமைகின்றது.

1. கொடுங்கோலன் அர்ட்டில்லாவின் படையணியை எதிர்த்துச் சென்ற பாப்பரசர் யார்?
2. மாட்டின் லூதரை திருச்சபையிலிருந்து நீக்கிய திருச்சபைத் தலைவர் யார்?
3. நெப்போலியனால் சிறைப்படுத்தப்பட்ட பரிசுத்த தந்தை யார்?

# நல்ல முடிவு

"பாட்டி! எனது அப்பா அம்மா எல்லாரும் எங்கே இருக்கிறாங்க? நான் இதுவரையும் அவர்களைப் பார்க்கவில்லையே; முன்வீட்டு யசிந்தா, அடுத்த வீட்டு அரியமலர் இவர்களுக்கெல்லாம் அப்பா அம்மா இருக்கிறார்கள்; எனது அப்பா அம்மா யாரு? சொல்லு பாட்டி" என்று விளையாட்டில் மூழ்கியிருந்த சிறுமி அற்புதம், திடீரென ஞானம் ஏற்பட்டவள்போல் ஓடிவந்து பாட்டியிடம் கேட்டாள். பாட்டிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இடியோசை கேட்ட நாகம் போல் ஆனாள்.

இவ்வளவு காலமும் தனது பேரக் குழந்தை அற்புதத்துக்கு எதைச் சொல்லக்கூடாது என்று மறைத்து வந்தாளோ அதைச் சிறுமியே கேட்டுவிட்டாள். சிறுமிக்கு வயது வந்துவிட்டது. இனி ஒருபோதும தான சொல்வதை நம்பமாட்டாள். எவ்வித சாக்குப்போக்கும் பலன் அளிக்கமாட்டாது என்பது பாட்டிக்குத்தெரியும். உண்மையைச் சொன்னால் வினையாக முடிந்துவிடுமோ என்று அஞ்சினாள். உள்ளதைச் சொல்லக்கூடாது என்றுதான் அவளது உள்ளமும் உறுத்தியது. தன்னைத் திடப்படுத்திக்கொண்டு "என் செல்லக்கண்ணு! உன்ர அம்மா நீ பிறந்த ஆறும் மாதத்தில் இறந்துவிட்டாள். உன்ர அப்பனும் அந்தத் துக்கம் தாங்கமாட்டாமல் எங்கேயோ போனவன்தான் ........."

"என்ன பாட்டி! ஒருமாதிரியாய் இருக்கிறாய்; நான் என்ன குற்றமாக்கும் செய்துவிட்டேன்."

"இல்லையடியம்மா! சும்மா எதையோ நினைத்துவிட்டேன்."

"பாட்டி! அப்பா எங்கோ போய் விட்டார் என்றாயே, அவருடைய பெயர் என்ன என்று சொல்லமாட்டாயா?"

"செல்லத்துரை என்று இந்தப் பகுதி ஆக்கள் கூப்பிடுவினம்; நான் துரை என்று செல்லமாகக் கூப்பிடுவன்."

சிறுமி அற்புதம் அதோடு விட்டுவிடவில்லை. மேலும் பல வினாக்களைக் கேட்டுக்கொண்டே போனாள்.

"செல்லப் பாட்டியல்லவா! அப்பா ஆருமாதிரி இருப்பார்என்று சொல்லு பாட்டி."

சிறுமி குழைவுடன் கேட்ட அந்தக் கேள்வி கிழவிக்கு மேலும் சோகத்தை வளர்த்தது. குழந்தையிடம் தந்தைப் பாசம் பொருமி வெடித்துக்கொண்டிருப்பதைக் கண்ட கிழவிக்குக் கண்களில் நீர் முட்டியது. பேத்தியை அணைத்து,

"உரிச்சுக்களட்டி உன்னைப்போலத்தான் அம்மா; உயர்ந்த மூக்கும், சுருள் மயிரும், அழகான சந்தனம் போல உடலும் அவனுக்கு; இப்ப தேசாந்திரியாய்த் திரிந்து எப்படி இருக்கிறானோ" என்று பெருமூச்சுவிட்டபடி,

"ஏண்டி அம்மா! உனக்குப் பசிக்கவில்லையா? வாவன் சாப்பிடுவம்" என்று கதையை மாற்றி அற்புதத்தைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றாள் பாட்டி.

* * *

சூசன் பாட்டியின் ஓரேமகன் செல்லத்துரை. அவனுக்குக் கலியாணமாகி ஒருகுழந்தையுடன் மனைவி இறந்துவிட்ட காரணமாக வீட்டை விட்டு, ஊரைவிட்டுப்போனவன்தான் மீண்டும் வீடுதிரும்பவில்லை. எங்கிருக்கிறானோ? எவருக்கும் தெரியாது. இறைவனுக்குத்தான் தெரியும்.

சிறுமி அற்புதம் பாடசாலைக்குப் போகத்தொடங்கினாள். அன்றொருநாள் அவளது வகுப்புஆசிரியை அற்புதத்தை விளித்து,

"அற்புதம்! உன் அப்பா அம்மா பெயரென்ன?" என்று கேட்டாள்.

சிறுமி உடனே "சூசன் பாட்டி" என்று விடையிறுத்தாள்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். ஒன்றும் புரியாது வேடிக்கை பார்ப்பவள்போல் நின்றாள் அற்புதம். ஆசிரியை அவளைத் தட்டிக்கொடுத்து,

"அற்புதம்! நாளை வரும்பொழுது அப்பா அம்மா பெயர் என்ன என்று கேட்டுவரவேண்டும் தெரியுதா?" என அன்புக்கட்டளை கொடுத்தாள்.

இந்தக் கட்டளைதான் அற்புதத்தின் மனத்தில் பெரியதோர் ஆசையை ஏற்படுத்தியது. ஆராய்வூக்கத்தைத் தூண்டியது. பெற்றோர் பாசத்தைப் பெருக்கெடுக்கச்செய்தது. வீட்டுக்கு வந்த அற்புதம், பாட்டியிடம் அதைக் கேட்டுவிடவேண்டும் என்ற ஆவலில் விளையாடுவதையே மறந்துவிட்டாள். தன் தாய்தந்தையரைப்பற்றி அறிவதே அவளது நோக்கமாக இருந்தது—கேட்டும்விட்டாள். பாட்டி சொன்ன பதில் ஓரளவு திருப்தியளித்தது. என்றாலும், எத்தனை நாட்களுக்கு அது நீடிக்கும்?

* * *

மூன்று ஆண்டுகள் கழிந்தன. அன்றொருநாள் அற்புதத்துக்கு மீண்டும் தந்தையின் எண்ணம் உதித்தது. எப்படியாவது தந்தையைக் கண்டுபிடித்துவிடவேண்டும் என்ற ஆவல் அவளைத் தூண்டிக்கொண்டிருந்தது. பக்கத்து வீட்டுப் பரமேஸ்வரியும் பெற்றோரும் பெரியமடுவுக்கு யாத்திரை போக இருப்பதாக அற்புதம் அறிந்துகொண்டாள். மருதமடுத் திருப்பதியில் பெருந்திரளாகச் சனங்கள் கூடுவார்கள். அந்தச் சனக்கூட்டத்தில் தனது தந்தையும வந்திருந்தால்... கண்டுபிடித்துவிடலாம்என்று அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எண்ணஅலைகள் உதித்தன. மறுநாள் பரமேஸ்வரியும், பெற்றோரும் மடுவுக்குப் புறப்பட்டுவிடுவார்கள். தானும் அவர்களுடன் போய்விடலாம என்ற ஆசை அவளுக்கு. பாட்டியிடம் நெருங்கிவந்து குழைந்து கொண்டு, பாட்டியின் முகத்தைத் தடவிக்கொடுத்து,

"பாட்டி! நீ சொல்லுவாயே 'பெரியமடு' என்று; நாளைக்கு அடுத்த வீட்டுப் பரமேஸ்வரியும், அவள் பெற்றோரும் போகிறார்களாம்; நானும் அவர்களுடன் போய்வரட்டுமா?" கேட்டபோது, சூசன்பாட்டியின் கண்களில் நீர்வழிந்தது. சிறுமியின் பெற்றோர் உயிருடன் இருந்தால் ...! இந்த எண்ணம்தான் கண்ணீருக்குக் காரணமாகும்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday August 25 -1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org